பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 28 | செவ்வாய்க்கிழமை | 14.11.2023 | அதிர்வு 105

## வரவு - செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை 2,851 பில்லியன் ரூபா



ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவால் நேற்று சமர்ப்பிக்கப் பட்ட வரவு – செலவுத் திட்டத்திற்கு அமைய 2024 ஆம் 02▶

# ஆட்சியாளர்களுக்குச் சொர்க்கமும் மக்களுக்கு நரகமும் கொண்ட பட்ஜட்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்



ஜனாதிபதியின் வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக ஆட்சியாளர்களுக்குச் சொர்க்கமும் மக்களுக்கு நரகமும் காட்டப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“வரவு – செலவுத் திட்ட உரையை ஆரம்பித்த ஜனாதிபதி 02▶

# வரவு - செலவுத் திட்டத்தில் புதிதாக ஒன்றும் இல்லை

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

“வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு 2024 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளைக் காட்டிலும் பல முன்மொழிவுகள் கடந்த காலங்களிலும் முன்வைக்கப்பட்டன. ஆனால், எவையும் செயற்படுத்தப்படவில்லை. 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகளை 2025 ஆம் ஆண்டும் முன்வைப்பார்கள்.” 06▶




## ஓட்டுமடத்தில் வீடு ஒன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்!



- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டுமடம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்று இரவு பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இரு குடும்பத் 06▶

## இளைஞர் ஒருவர் குத்திக் கொலை!



இளைஞர் ஒருவர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். 06▶

## யாழ். வந்த விமானம் தரையிறங்க முடியாமல் மீண்டும் சென்னைக்கு

### மோசமான காலநிலையால் இந்த நிலை

(பிரபாகரன் டிலக்சன்)

சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பயணிகள் விமானம், மோசமான காலநிலையால் யாழ்ப்பாணம்சர்வதேசவிமானநிலையத்தில் தரையிறங்க 04▶






இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளை இரண்டு, மூன்று வருடங்களின் பின்னர் நேற்றுத் திடீரென கூடவிருப்பது குறித்து நேற்று இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன்.

அக்கிளையுடன் எனக்கு சொற்ப காலம் நெருங்கிய ஊடாட்டம் இருந்தது. ஒரு மூன்று, மூன்றரை ஆண்டு காலம். அதுவும் கூட பத்து வருடத்திற்கு முந்திய கதை.

எனினும், அதன் பழைய 06▶

# விளையாட்டுத்துறை அமைச்சர் மேன்முறையீட்டு மனுத் தாக்கல்

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்சேபனை மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் செயற்பாடுகளை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்பட்ட இடைக்காலக் கட்டுப்பாட்டு குழுவின் செயற்பாடுகளை இடைநிறுத்தி பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை நீக்குமாறு கோரி விளையாட்டுத் துறை அமைச்சர் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்தரணி ஜீ.ஜி.அருள்பிரகாசம் ஊடாக விளையாட்டுத்துறை அமைச்சர் இந்த ஆட்சேபனைகளை தாக்கல் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் சபை தாக்கல் செய்த மனுவைப் பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், அர்ஜுன ரணதுங்கவின் தலைமையில் நியமிக்கப்பட்ட இடைக்கால கிரிக்கெட் கட்டுப்பாட்டுக் குழுவின் செயற்பாடுகளையும் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலையும் இடைநிறுத்தி இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை வெளியிட்டது.



இந்த இடைக்கால தடை உத்தரவை நீக்குமாறு கோரியே விளையாட்டுத்துறை அமைச்சர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

# இலங்கை சுங்கச் சட்டத்தை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



இலங்கை சுங்கச் சட்டத்தைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டம் நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இதனை நாடாளுமன்றில் சமர்ப்பித்தார்.

இதன்போதே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில் –

2032ஆம் ஆண்டளவில் இலங்கையின் அரசகடன் 95 சதவீதமாகக் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரச வங்கிகளின் 20 சதவீத பங்குகளை மூலோபாய முதலீட்டாளர்கள் அல்லது பொதுமக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

வங்கி கட்டமைப்பில் மூலதனத்தை மேம்படுத்தும் செயன்முறைக்கு ஆதரவளிப்பதற்காக 45 கோடி ரூபா ஒதுக்கிடப்படும்.

பருவநிலை மாற்றம் தொடர்பான ஆணைக்குழு விரைவில் ஸ்தாபிக்கப்படும் .

பருவநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகமொன்றை நிறுவுவதற்காக கொத்மலை பகுதியில் 600 ஏக்கர் காணி ஒதுக்கப்படவுள்ளது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## துண்டு விழும் தொகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்டில் அரச வருமானம் 4 ஆயிரத்து 172 பில்லியன் ரூபாவாகும். அரசின் மொத்தச் செலவீனம் 6 ஆயிரத்து 978 பில்லியன் ரூபாவாகும். இதற்கிணங்க, வரவு – செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை 2 ஆயிரத்து 851 பில்லியன் ரூபாவாகும்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டமை இம்முறை வரவு – செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட முக்கிய நிவாரணமாகும்.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நண்பகல் வரவு – செலவுத் திட்ட யோசனையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவர் சமர்ப்பித்த இரண்டாவது வரவு – செலவுத் திட்டம் இதுவாகும்.

இந்த வரவு – செலவுத் திட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவால் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இன்று ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விவாதம் நடைபெறவுள்ளது.

வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 21 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வரவு – செலவுத் திட்டக் குழுநிலை விவாதம் அல்லது வரவு – செலவுத் திட்டம் தொடர்பிலான மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் டிசம்பர் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

வரவு – செலவு திட்டக் குழுநிலை விவாதம் எனப்படுகின்ற மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 13 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நேற்று சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டத்துக்கு அமைய 2024 ஆம் ஆண்டில் அரச வருமானம் 4 ஆயிரத்து 172 பில்லியன் ரூபாவாகும்.

அரசின் மொத்தச் செலவீனம் 6 ஆயிரத்து 978 பில்லியன் ரூபாவாகும்.

இதற்கிணங்க வரவு – செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை 2 ஆயிரத்து 851 பில்லியன் ரூபாவாகும்.

அடுத்த வருடத்தில் கடனையும் வட்டியையும் செலுத்துவதற்காக அரசு 6 ஆயிரத்து 919 பில்லியன் ரூபாவைச் செலவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி, அடுத்த வருடத்துக்கான கடன் தேவை 7 ஆயிரத்து 350 பில்லியன் ரூபாகும்.

இதற்கிணங்க, அரசின் கடன் எல்லையான 3 ஆயிரத்து 900 பில்லியன் ரூபாவை மேலும் 3 ஆயிரத்து 450 பில்லியன் ரூபாவால் அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

## ஆட்சியாளர்களுக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பௌத்தத்தை அவமதித்தார். பிரார்த்தனை செய்ய வேண்டியவர்கள் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று புத்த பகவான் கூட போதித்தார். ஆனால், தற்போதைய ஜனாதிபதி பிரார்த்தனை செய்யவில்லை.

இதுநாட்டுமக்களைஏமாற்றும்முயற்சி. இந்த வரவு – செலவுத் திட்டத்தில் நரகம் பற்றிப் பேசினாலும், ஆட்சியாளர்கள் சொர்க்க லோகத்தில் உள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் வருவாய் இலக்குகளை நிறைவு செய்ய முடியாததால், அதன் இரண்டாவது கட்டக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில், ஏனோதானே அடிப்படையில் வரவு – செலவுத் திட்டம் ஜனாதிபதி தலைமையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2024ஆம்ஆண்டுவரவு–செலவுத்திட்டத்தில் உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் திட்டம் பற்றிப் பேச முன், 2023 ஆம் வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுகளில் எத்தனை விடயங்களை நிறைவேற்ற முடிந்தது என்பது குறித்து சிந்திக்க வேண்டும் .

இன்று சமர்ப்பித்த வரவு – செலவுத் திட்ட முன்மொழிவில் பாரியளவிலான விடயங்களை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது.” – என்றார்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# முதலையின் பிடியில் சிக்கிப் போராடி படுகாயங்களுடன் தப்பிய குடும்பஸ்தர்

## பொத்துவில் பகுதியில் நடந்த சம்பவம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கால் நடை வளர்ப்பில் ஈடுபட்டு வரும் ஒருவர் முதலையின் பிடியில் சிக்கி பலத்த போராட்டத்திற்கு மத்தியில் காலில் பலத்த காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட றொட்டைப் பகுதியில் வைத்து இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மாடுகளை மேய்ப்பதற்காக றொட்டைக் கிராமத்தில் உள்ள குளம் ஒன்றைக் கடக்க முற்பட்ட போதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தம்பிலுவில் பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான பத்மநாதன் எனப்படும் குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு முதலைப் பிடியில் சிக்கியுள்ளார்.

முதலைப்பிடியிலிருந்து பலத்த காயங் களுடன் உயிர் தப்பியவர் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்



### திரு.தங்கராஜா துரைராஜா

(Formerly at Lawrie Muthu Krishna & Co., Colombo)

உடுப்பிட்டி வடக்கு கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை தற்போது குமாரசாமி வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராஜா துரைராஜா அவர்கள் 10.11. 2023 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராஜா, தங்கம் தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், கமலராணியின் (Former Assistant General Manager, Bank of Ceylon) பாசமிகு கணவரும், கலாநிதி நிராஜ் (Associate Professor, Northumbria University, UK), கலாநிதி நிருஜா (Consultant, US) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராங் (Academic advisor), கலாநிதி பிரணவன் (Senior technical specialist) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிகையின் அன்புப் பேரனும் ஆவார்.

அருணகிரிராஜா (Former Deputy Director of Education), சுரேந்திரராஜா (Denmark) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வமகள் (Former Teacher, Vembadi Girls' High School), அம்பிகா (Denmark), சிதம்பரநாதன் (F.C.A), செல்வராணி (US), சண்முகநாதன் (Germany), காலஞ்சென்ற திருச்செல்வநாதன், அனந்தராணி (Canada), சிவனேசநாதன் (UK), ஜீவராணி (UK), மதிவதனராணி (Canada), காலஞ்சென்ற தாமரைச்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15.11.2023 புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

35/2,குமாரசாமி வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல் - குடும்பத்தினர்
T.P: - 021 222 1139

## யாழ்.வந்த விமானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடியாமல் மீண்டும் சென்னைக்குத் திரும்பியது.

நேற்றுக் காலை சென்னை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து யாழ்ப் பாணம் சர்வதேச விமான நிலையம் நோக்கிப் புறப்பட்ட பயணிகள் விமா னம், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் நிலவிய மோசமான கால நிலையால் தரையிறங்க முடியா மல் மீண்டும் சென்னை சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப் பட்டது.

இந்த விமானம் இன்று காலை மீண்டும் யாழ்ப்பாணம் வரும் என்று அறி விக்கப்பட்டுள்ளது.

விமானத்தில் மொத்தமாக 24 பயணி கள் பயணித்த நிலையில் அவர்களுக் கான மாற்றுப் பயணச்சீட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பயணிகள்அனைவரும்சென்னையில் உள்ள ஹோட்டல்களில் நேற்று தங்க வைக்கப்பட்டனர்.


## உலக நீரிழிவு தினம் Nov 14

### நீரிழிவால் ஏற்படும் பாதிப்புக்கள்


மாரடைப்பு


பார்வையிழப்பு


பாரிசவாதம்


மாறாப்புண்கள்

### நீரிழிவை வெற்றி கொள்ள . . .

- சீனி பண்டங்களையும், பானங்களையும் தவிர்ப்போம்.
- சோறு மற்றும் மாப்பொருட்களை அளவாக உண்போம்.
- அதிகளவு ஊட்டச்சத்து, நார்ச்சத்து உள்ள நிறை உணவுகளை உண்போம்.
- தினமும் 30 நிமிடம் உடற்பயிற்சி செய்வோம்.
- மனஅழுத்தம் அற்று வாழ்வோம்.

யாழ் நீரிழிவு கழகம்

**RUHBINS HOSPITAL (PVT) LTD.**

NO. 160, POINT PEDRO ROAD, NELLIYADY, JAFFNA.

## NOVEMBER 14

# WORLD DIABETES DAY

# DIABETES IS A SILENT KILLER

| Approximately 463 M + From the World Population | Over 2 M Sri Lankans are Diabetes | Every 6 seconds One person dies due to Diabetes |
|---|---|---|



## Access to Diabetes Care

### WELLNESS PACKAGE

- HBA1C
- Fasing/ Random Blood Sugar
- Total Cholesterol
- Creatinine & eGFR
- Blood Pressure
- BMI Assessment
- Consultation with Medical Officer
- Advice on Lifestyle Modification

**Special Offer**

**Rs. 5,500/-**

**Offer valid till Dec 14th**

Hotline: +94772486642

உங்கள் அன்பிற்குரியவரை நீரிழிவு பரிசோதனை செய்துகொள்ள சொல்லுங்கள், அது அவர்களின் உயிரை பாதுகாக்கும்.

Ruhbins Hospital

No. 160, Pointpedro Road, Nelliyadi, Jaffna

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உறுப்பினர்கள் பலரை எனக்கு நன்கு தெரியும். குறைந்தது மூன்று டசின் பேரையாவது நான் நன்கு அறிவேன். அவர்களில் சிலரை நேற்றிரவு தொடர்பு கொண்டேன். அவர்கள் யாருக்கும் கூட்டம் குறித்து தகவலே இல்லை. ஒருவர் மட்டும் 'முதல் நாள்தான் தகவல் கிடைத்தது, அப்படிக் கூட்டுவது முறையற்றது எனக் கட்சியின் பதில் பொதுச் செயலாளருக்கு எழுத்தில் அறிவித்துள்ளேன், அதனால் கூட்டத்தில் பங்குபற்றவில்லை' என்றார்.

இன்னொருவரோ "உங்கள் பத்திரியை பார்த்து, அறிந்து,கூட்டத்துக்கு போயிருந்தேன். பழைய முகங்கள், நீண்ட கால உறுப்பினர்கள் எவரையும் காணவில்லை. இப்படிக் கூட்டுவது முறையற்றது என்று ஆரம்பத்திலேயே எடுத்துரைத்தேன். பழைய உறுப்பினர்கள் பலருக்கு விடயமே தெரியாது என்றேன். எனினும் என் கோரிக்கை ஏற்கப்படவில்லை. அதனால் எழுந்து வந்து விட்டேன்" – என்றார்.

"கூட்டத்துக்கு சுமார் ஒன்றரை டசின் பேர் வந்திருப்பார்கள். எல்லோரும் புதிய முகங்கள். அவர்களில் 7, 8 பேரிடம் அப்போதுதான் கட்சி அங்கத்துவப் பத்திரம் வழங்கி நிரப்பி கொண்டு இருந்தார்கள்" – என்றும் அவர் கூறினார்.

இதற்கு மேல் எனக்கு விவரம் தெரிய வரவில்லை.

எது, எப்படி என்றாலும் கட்சியின் ஒரு கிளையின் உறுப்பினர்களின் பெயர் பட்டியல் மற்றும் விலாசம், தொடர்பாடல் விவரங்கள் ஒழுங்காகப் பேணப்பட்டு இருந்தால்தான் அவர்களுக்குக் கூட்டம் குறித்து நேர்த்தியாக அறிவித்திருக்க முடியும். அதுவே சம்பந்தப்பட்டோரிடம் இருக்கின்றதோ, என்னவோ...!

ஆயினும் உறுப்புரிமை பெற்ற ஒவ்வொருவரினதும் விவரமும் கட்சியின் நிர்வாக செயலாளரிடம் கட்டாயம் இருக்கும். அதை ஒழுங்காகப் பேணுவதில் தற்போதைய நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஒரு சூரர். கொழும்புக் கிளையின் முழு அங்கத்தவர் பட்டியல் நிச்சயம் அவரிடம் இருக்கும். அவர் தலையிட்டால் ஒழுங்காகக் கூட்டம் நடைபெறும் என்பதும் உறுதி.

ஆயினும் ஒன்று. எண்பதுகளின் ஆரம்பத்தின் பின்னர் 2010 இல் தான் தமிழரசின் கொழும்புக் கிளை மறுசீரமைக்கப்பட்டது. மீண்டும் ஒரு தடவை அது செய்யப்பட வேண்டும் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

\+ \+ \+

நாட்டில் பல விடயங்கள் இப்போது 'டீல்' அடிப்படையிலே அமைகின்றன.

ஏன் கடவுளுக்கு நேர்த்தி வைப்பது கூட ஒரு டீல்தானே...? நீ இன்ன விடயத்தை எனக்கு அருளினால் நான் இன்ன விடயத்தைச் நேர்த்தியாகச் செய்வேன் என்பது கடவுளுடன் செய்யும் டீல் தானே..?

நமது நாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஒரு டீல் மன்னர்தான்.

இப்போதும் கூட, நேற்றுத் தான் சமர்ப்பித்த வரவு – செலவுத் திட்டத்திலும் அவர் ஒரு டீல் போட்டு இருக்கின்றார் – பதினைந்து லட்சம் அரச ஊழியர்களுடனும்.

அவர் சமர்ப்பித்த வரவு – செலவுத் திட்டத்தின் பிரதான பேசுபொருள் அரச ஊழியர்களுக்கு அவர் வழங்க முன் வந்திருக்கும் தலா பத்தாயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுப்படி தொடர்பான அலவன்ஸ் அதிகரிப்புத்தான்.

அது வரும் ஜனவரியில் இருந்து நடைமுறைக்கு வரும் என்றாலும், வரும் ஏப்ரல் வரை அந்தந்த மாதத்தில் அது வழங்கப்பட மாட்டாது. மூன்று, நான்கு மாத நிலுவையும் ஏப்ரலுக்குப் பின்னர் சேர்த்தோ, பகுதி பகுதியாகவோ வழங்கப் படும்.

அதன்படி அவரின் டீல் விடயம் தெளிவானது.

மார்ச் 24 இல் பிறந்தவர் ரணில். அடுத்த மார்ச் 24 இல் அவருக்கு 75 வயது. அச்சமயத்தில் மக்களால் தேர்வு செய்யப்பட்ட அடுத்த ஜனாதிபதியாகப் பதவியேற்ற அவர் விரும்புகின்றார். அதற்காக அடுத்த ஜனாதிபதித் தேர்தலை ஆறு, ஏழு மாதங்கள் முற்கூட்டியே நடத்த அவர் விரும்புகின்றார் என்ற ஒரு செய்தியை ஏற்கனவே நாம் வெளியிட்டிருந்தோம்.

அப்படித் தேர்தலை முற்கூட்டியே நடத்தும் திட்டத்தை ஒட்டித்தான் இந்த பத்தாயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவு டீலை அவர் பிரஸ்தாபித்திருக்கின்றார் என்கின்றார் கொழும்பு அரசியல் விமர்சகர் ஒருவர்.

மக்களுடனான அவரது டீல் இரண்டு வகையில் ஒன்றாக இருக்கலாம் என்கிறார் அவர்.

முதலாவது – ஜனாதிபதி தேர்தலுக்கு சற்று முன்னர் மேற்படி அலவன்ஸின் மூன்று மாத நிலுவைக் கொடுப்பனவுடன் சேர்த்து ஒவ்வொரு அரசு ஊழியருக்கும் தலா 40,000 ரூபாவைக் கையில் வழங்கிவிட்டு, அடுத்த சில நாள்களில் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பை நடத்துவது.

அடுத்தது – எல்லா அரசு ஊழியர்களின் கணக்கிலும் மேற்படி மேலதிக கொடுப்பனவுக்கான வழங்கலான சுமார் 40 ஆயிரம் ரூபாவை அவர்கள் வழங்கப்பட வேண்டிய நிலுவையாகக் காட்டிக்கொண்டு, தேர்தலை நடத்துவது. இந்தத் தேர்தலில் நான் வென்று, மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால்தான் இந்த 40 ஆயிரம் ரூபா நிலுவையும் தப்பாமல், உறுதியாக உங்களுக்கு கிடைக்கும் என்ற செய்தியை அரச ஊழியர்களுக்கு உணர்த்தியபடி தேர்தலை நடத்துவது.

எந்த வகையில் டீல் அமைந்தாலும் ரணிலுக்கு வாசியான நிலைமைதான் என்றார் அந்த விமர்சகர்.

மனிதன் ஒன்று நினைக்க, கடவுள் வேறு ஒன்றை நிறைவேற்றுவது போல, ரணில் தாம் ஒரு கணக்கில் டீல் போட, மக்கள் வேறு விதத்தில் கணக்கிட்டு விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை....!

## ஓட்டுமடத்தில் வீடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தினரிடையே ஏற்பட்ட முரண்பாடே இந்தத் தாக்குதல் சம்பவத்துக்குக் காரணம் என்று முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வரவு - செலவுத் திட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வழமையான அறிக்கையாகவே 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் ஜனாதிபதியால் சபையில் வாசிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டு முன்வைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தில் இந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. குறிப்பிட்ட முன்மொழிவுகள் ஏதும் செயற்படுத்தப்படவில்லை.

நாட்டு மக்கள் பொருளாதார பாதிப்பால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வரவு – செலவுத் திட்டத்தில் வரி அதிகரிப்பதாலும், சொற்ப அளவில் சம்பளம் அதிகரிப்பதாலும் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. எதிர்காலத்தின் மீது நம்பிக்கை கொள்ளும் வகையில் வரவு – செலவுத் திட்டம் அமையவில்லை.

வருடாந்தம் சமர்ப்பிக்கப்படும் சம்பிரதாயபூர்வமான வரவு – செலவுத் திட்டமாகவே 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விடுத்து இறந்த காலத்தை அடியொற்றியதாக சகல முன்மொழிவுகளும் காணப்படுகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளைக் காட்டிலும் பல முன்மொழிவுகள் கடந்த காலங்களிலும் முன்வைக்கப்பட்டன.

ஆனால், எவையும் செயற்படுத்தப்படவில்லை. 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகளை 2025 ஆம் ஆண்டும் முன்வைப்பார்கள். எதனையும் செயற்படுத்தமாட்டார்கள்." – என்றார்.

## இளைஞர் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹொலிரூட் தோட்ட தொழிற்சாலை முன்பாக நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்ற மோதலிலேயே குறித்த இளைஞர் கத்திக் குத்துக்கு இலக்காகியுள்ளார்.

இதில்படுகாயமடைந்தஅவர், கவலைக்கிடமான நிலையில் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிரேட் வெஸ்டன் பகுதியைச் சேர்ந்த சிவஞானம் சஜீவன் எனும் 22 வயதுடைய நபரே கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை தலவாக்கலைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## திம்புக் கோட்பாடு புரியாதவர்கள்

'கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான்' - என்பார்கள். அப்படி நம் மத்தியில் சில விமர்சகர்கள், அரசியல் ஆய்வாளர்கள் என்று புறப்பட்டிருப்பவர்கள் அரைகுறை விடய அனுபவங்களோடு கருத்து விதைக்கக் களமிறங்கியிருக்கின்றார்கள்.

இந்தியத் தூக்கு காவடியாக 13 ஆம் திருத்தத்தின் கீழான மாகாணசபையைக் காவித் திரியும் அவர்கள், சமஷ்டி கோரிக்கை தமிழ் மக்களின் அபிலாசை அல்ல என்றும் நிரூபிக்க கங்கணம் கட்டிப் புறப்பட்டிருக்கின்றார்கள்.

சமஷ்டிக் கோரிக்கையிலிருந்து தமிழ் மக்களை விழுத்தினால்தான் இந்தியாவிடம் பிச்சை புகும் 13 ஆம் திருத்தத்துடன் தமிழர்களை தொடர்ந்து தொங்கிக்கொண்டு நிற்க வைக்கலாம் என்பது அவர்களின் கணிப்பீடு.

'மழைக்கால இருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது' என்பார்கள். தமிழர்களும் தமது சமஷ்டிக் கொப்பை இழக்க விடமாட்டார்கள் என்பது திண்ணம்.

சமஷ்டிக் கோரிக்கையை நம் மக்கள் வலியுறுத்தாமல், மாகாண சபை முறைமையை மட்டும் கட்டிப் பிடித்து நிற்க வைக்க வேண்டும் என்ற வழிகாட்டல் உபதேசத்தை பக்கத்துத் தரப்புகளிடம் பெற்றுக் கொண்ட இந்த விமர்சகர்களில் ஓரிரு பேர்வழிகள், சமஷ்டியில் இருந்து தமிழ் மக்களை விலக - விலக்க - வைப்பதற்காகத் திம்புக் கோட்பாட்டை கூட ஏளனத்துடன் வையும் நிலைமை ஏற்பட்டிருப்பதுதான் வேதனையிலும் வேதனை.

திம்புப் பேச்சுக்குப் போன நம்மவர்களில் சிலர், தங்களுக்குள் ஒரு வட்ட மேசையிலிருந்து பேசி, வகுத்துக்கொண்ட விடயமே அது, அதற்கு சர்வதேச அங்கீகாரம் - தகுதி நிலை கிடையாது என்றெல்லாம் கூட அவர்கள் பேட்டியளிக்கின்றார்கள். கருத்து வெளியிடுகின்றார்கள் - தமிழர்களின் போராட்ட வரலாறு தெரியாமல்.

சுருக்கமாகச் சொல்வதானால் 1985 ஜூலையில் திம்புவில் தமிழர் தரப்புகள் ஒன்று சேர்ந்து, தமிழ் மக்களின் அபிலாசை யாது என்பதை தெளிவுபடுத்தினர். அதுவே திம்புக் கோட்பாடாக உரைக்கப்படுகிறது. அவை:-

1. இலங்கைத் தமிழர்கள் தனித்துவமான தேசிய இனம்.

2. அவர்களுக்கு அடையாளம் காணப்பட்ட தனித்துவமான தொடர் தாயகம் உள்ளது.

3. அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை இருப்பதை அங்கீகரிக்க வேண்டும்

4. இலங்கையில் வாழ்கின்ற அனைத்துத் தமிழர்களினதும் குடியுரிமை மற்றும் அடிப்படை உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும்.

- இவையே அந்த விடயங்கள். இதில் நான்காவது அம்சத்தை இலங்கை அரசு அப்போதே ஏற்றுக் கொண்டது. பிரதானமாக மலையகத் தமிழரை முன்னிறுத்தி அந்த விடயம் முன்வைக்கப்பட்டது. அந்தப் பிரச்சினை இப்போது ஓரளவு தீர்க்கப்பட்டு விட்டது.

திம்புப் பேச்சு முடிந்து - முறிந்து - சரியாக இரண்டு ஆண்டுகளின் பின், 1987 ஜூலையில், இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டது. திம்புக் கோட்பாட்டின் முதல் இரண்டு அம்சங்களும் அப்படியே அங்கீகரிக்கப்படும் விதத்தில் அந்த ஒப்பந்தத்தின் முகவுரையில் அவை சேர்க்கப்பட்டுள்ளன.

மூன்றாவது அம்சமான சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்பது 2002 டிசம்பரில் அரசு - புலிகள் ஒஸ்லோ பேச்சுக்களின் போது எட்டப்பட்ட இணக்கத்தின் முடிவில் வெளியிடப்பட்ட ஒஸ்லோ அறிவிப்பில் இலங்கையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது - நோர்வேயின் பங்களிப்புடனான சமாதான முன்னெடுப்பு முயற்சிகளின் போது.

எனவே திம்புக் கோட்பாட்டின் மூன்று அம்சங்களும் தனித்து தமிழர் தரப்பினால் பிரேரிக்கப்பட்டவை மட்டுமல்ல, சர்வதேச மட்டத்தில் நடத்தப்பட்ட சமரச நடவடிக்கைகளின் போது - சர்வதேசப் பங்களிப்புக்கு மத்தியில் - இலங்கை அரசால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டவையும் கூட.

அரசியல் விமர்சகர்கள் என்று தங்களை முன்னிறுத்திக் கொள்ளும் பிரகிருதிகள் திம்புக் கோட்பாட்டிற்கான சர்வதேச மட்ட அங்கீகாரத்தையும் இலங்கை அரசே அவற்றை ஏற்று இணங்கியமையையும் மறந்து - மறுத்து - பேசுவதைக் கைவிட வேண்டும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"ஒருமரத்தைநடவுசெய்வதுபிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக் கொள்வதற்கான எளிதான வழியாகும்."

- அமிற் றே
(இந்திய ஆன்மீகக் குரு)



# யாழிலுள்ள ஆலயங்களில் நேற்று கேதார கௌரி விரத காப்பு பூசை





கேதார கௌரி விரத காப்புபூசைவழிபாடுகளும் காப்பு கட்டுதலும் யாழிலுள்ள ஆலயங்களில் நேற்று நடைபெற்றது..

கடந்த 21 நாள்களாக அனுஷ்டிக்கப்பட்டு வந்த கேதார கௌரி விரதத்தின் இறுதி நாளான நேற்றய் திங்கட்கிழமை காப்பு கட்டுதல் நிகழ்வு அம்மன் ஆலயங்களில் இடம்பெற்றது.

கொடிகாமம் அருள்மிகு ஸ்ரீ மஹாலாவண்யா காளி அம்பாள் திருக்கோவிலிலும் காப்பு பூசை இடம்பெற்றதுடன் கேதார கௌரி விரதம் இருந்தவர்களுக்கு காப்பு கட்டுத்தல் நிகழ்வும் இடம்பெற்றது. அதன் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# வரவு – செலவு திட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்துவது சாத்தியமா?

## ரவூப் ஹக்கீம் சந்தேகம்



வரவு – செலவு திட்டத்தில் ஜனாதிபதி பல யோசனைகளை முன் வைத்துள்ள நிலையில் அவற்றை நடைமுறைப்படுத்த முடியுமா என்பதே எமது கேள்வியாக உள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை நேற்று ஜனாதிபதி முன்வைத்து உரையாற்றியமையையடுத்து அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த வருடம் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்ட யோசனைகளில் 90 வீதமானவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை நாம் அறிவோம்.

அதேபோன்று அரசாங்கத்தினால் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டு வரும் கடன் மறுசீரமைப்பு இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அதனை நடைமுறைப்படுத்தாமல் வேறு எதையும் முன்னெடுக்க முடியாது.

வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக ஜனாதிபதி சிறந்த விடயங்களை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். எனினும் அரசாங்கத்தினால் அதனை நடைமுறைப்படுத்த முடியுமா? என்பதே கேள்வியாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 2024 இல் ஜனாதிபதி தேர்தல் என்பதை இந்த பட்ஜெட் உறுதிப்படுத்தியுள்ளது!

## ஹர்ஷ டி சில்வா எம்.பி. தெரிவிப்பு

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் – ஒக்டோபர் மாதமளவில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என்பதை ஜனாதிபதி வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக உறுதிப்படுத்தியுள்ளார்.

வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அதிகரிக்கப்பட்டுள்ள வரி விதிப்பை ஜனாதிபதி தெளிவுப்படுத்தவில்லை. தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டே வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாமன்றத்தில் முன்வைத்தார். இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஹர்ஷ டி சில்வா எம்.பி. மேலும் தெரிவிக்கையில் –

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் ஜனாதிபதி வரவு – செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளார் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் சமூகக் கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் வரவு – செலவுத் திட்டம் அமையவில்லை.

2024 ஆம் ஆண்டு தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது தெளிவாக வெளிப்படுகிறது. அடுத்த ஆண்டு ஏப்ரல் முதல் ஒக்டோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என்பதை ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார்.அரச சேவையாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவால் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கிறோம்.



அரச துறையை காட்டிலும் பல லட்சம் பேர் தனியார் துறையில் சேவையாற்றுகிறார்கள். தனியார் துறை தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படவில்லை.இதனை பிரதான குறைப்பாடாகக் கருத வேண்டும்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அதிகரிக்கப்பட்டுள்ள வரி தொடர்பில் அவர் தெளிவுப்படுத்தவில்லை. மறுபுறம் சமூக பாதுகாப்பு அறவீட்டுத்தொகைக்காக வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரச வருமானத்துக்கும் அரச செலவினத்துக்கும் இடையில் காணப்படும் பற்றாக்குறையை முகாமைத்துவம் செய்யும் திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை. ஆகவே வரவு – செலவுத் திட்டத்தில் காணப்படும் குறைப்பாடுகளை சுட்டிக்காட்டுவோம் என்று தெரிவித்துள்ளார்.

# சகல தரப்பினரது கோரிக்கைகளையும் ‘பட்ஜெட்’ ஊடாக நிறைவேற்ற முடியாது

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



நாட்டின் சகல தரப்பினரது கோரிக்கைகளையும் வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக நிறைவேற்ற முடியாது. எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து எதிர்பார்க்கிறோம் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவிக்கையில் –

“பாரிய நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவு – செலவுத் திட்டத்தை முன்மொழிந்துள்ளார் என்பதை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜனாதிபதியிடம் வரவு – செலவு திட்டத்தைப் புகழ்ந்து விட்டு குறுகிய அரசியல் நோக்கத்துக்காக மக்கள் மத்தியில் வரவு – செலவுத் திட்டத்தை விமர்சிப்பது முறையற்றது.

நாடு தற்போது பொருளாதார நெருக்கடி உள்ளதே தவிர அரசியல் நெருக்கடி இல்லை என்பதை எதிர்க்கட்சிகள் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.கடந்த ஒருவருட காலமாக அரசியல் நோக்கமில்லாமல் தீர்மானங்கள் எடுத்ததால் நாடு சற்றேனும் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

சகல தரப்பினராலும் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக நிறைவேற்ற முடியாது.2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நிலையான பொருளாதார கொள்கை என்பதை இலக்காக கொண்டுள்ளது.அரச சேவையாளர்களுக்கு 10,000 ரூபா கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளதே தவிர அரச சேவையாளர்களின் எண்ணிக்கையை விரிவுப்படுத்தும் நோக்கம் ஏதும் கிடையாது.

வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் யோசனைகள் குறித்து நிச்சயம் அவதானம் செலுத்துவோம். எதிர்க்கட்சிகளை புறக்கணித்து ஒருபோதும் செயற்பட போவதில்லை. பொருளாதார மீட்சிக்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பை தொடர்ந்து எதிர்பார்க்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# வரவு – செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகள் மக்களை ஏமாற்றும் மற்றுமொரு செயற்பாடு!

## மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

நாட்டு மக்களை ஏமாற்றும் பிறிதொரு செயற்பாடாகவே 2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் காணப்படுகிறது. நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்கும் எவ்வித பரிந்துரைகளும் முன்வைக்கப்படவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஹரினி அமரசூரிய எம்.பி மேலும் தெரிவிக்கையில் –

தவறுகளை திருத்திக் கொண்டு முன்னேறிச் செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவு – செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட சமர்ப்பின் போது இந்த கருத்தையே குறிப்பிட்டார். ஆனால் எந்த தவறும் திருத்திக் கொள்ளப்படவில்லை.

நாட்டு மக்களை ஏமாற்றும் பிறிதொரு செயற்பாடாகவே இந்த வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு முன்வைக்கப்படவில்லை. வரி அதிகரிப்பு, தேசிய வளங்களை விற்றல் என்பவையே அரச கொள்கையாக முன்வைக்கப்பட்டுள்ளன.



வரையறையற்ற கடன்களினால் நாடு வங்குரோத்து நிலையடைந்தது என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் கடன்படு எல்லையை 3400 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளார். ஆகவே இந்த வரவு – செலவுத் திட்டம் நடைமுறைக்கு ஒருபோதும் சாத்தியமாகாது.

நாட்டில் 17 அரச பல்கலைக்கழகங்கள் உள்ளன. இவற்றில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு முன்வைக்கப்படவில்லை.

மாறாக புதிதாக 4 பல்கலைக்கழகங்களையும், தனியார் பல்கலைக்கழகங்களையும் உருவாக்குவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். இது நகைப்புக்குரியது.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என்பதை ஜனாதிபதி தனது முன்மொழிவுகள் ஊடாக குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. – என்று தெரிவித்துள்ளார்.

# ஹட்டன் நகரப் பிரதேசத்தில் குவிந்து கிடக்கும் குப்பைகள்

(மஸ்கெலியா நிருபர்: செ.தி.பெருமாள்)

தீபாவளி திருநாளை முன்னிட்டு ஹட்டன் நகரில் எங்கு பார்த்தாலும் தற்காலிக வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டு வர்த்தகம் இடம் பெற்று வந்தது.

இவ்வாறான காலகட்டத்தில் நகரில் பல் வேறு இடங்களில் உக்கும், உக்கா பிளாஸ்டிக் குப்பைகள் குவிந்து உள்ளன.

இதனால் நகருக்கு வரும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும் நிலை உள்ளது.

ஹட்டன் நகரில் உள்ள ஏனைய குடியிருப்பு பகுதியில் உள்ள வீதிகளிலும் இவ்வாறான குப்பைகளைக் காணக்கூடியதாக உள்ளது.

ஹட்டன் நகர சபை குப்பை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதும் அதிக அளவில் ஊழியர்களை அவ்வேலையில் இணைக்கவில்லை.

அதனால் நகர், நகரில் உள்ள ஏனைய குடியிருப்புப் பகுதிகளைச் சுத்தம் செய்யும் பணியைத் தீவிரப் படுத்த வேண்டும் என நகர் வர்த்தகர்கள் மற்றும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.






வைத்தியர் வெ. நாகநாதன்
(யாழ்ப்பாணம்)

# இனிப்பு நோயின் கசப்பு முகம்

இனிப்பு நோயின் கசப்பு முகமே சர்க்கரை நோய் எனப்படும் நீரிழிவு நோய்.

நீரிழிவு நோயாளிகள், வாழ்க்கை முறையில் செய்யும் சின்னச் சின்ன மாற்றங்கள் மூலம் அந்நோயைத் திறம்படச் சமாளிக்க முடியும்.

கடுமையான உடற்பயிற்சிகளைக் கண்டு அஞ்சாமல் கொஞ்சம் கொஞ்சமாக முயற்சி செய்யலாமெனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்நோயை முழுதாகக் குணமாக்க முடியாது. இருப்பினும் மருத்துவ ஆலோசனைப்படி நடப்பதில் நோயாளி முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் இந்நோயின் தொடர் விளைவுகளைத் தடுக்கவோ அல்லது குறைக்கவோ முடியும். நீரிழிவு நோயாளி ஒருவரைப் பொறுத்த வரையில் சுயகட்டுப்பாட்டுடன் எந்நேரமும் கவனத்துடன் செயற்பட்டால் உடல் ஆரோக்கியத்தைப் பேணி, வாழ்நாளை நீடித்துக்கொள்ள முடிகிறது.

நீரிழிவு நோய் குறித்து நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக அறியப்பட்டிருந்தாலும் கூட, இதற்கான உறுதியான சிகிச்சை முறை என்பது இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்தில்தான் கண்டறியப்பட்டது. 1922 ஆம் ஆண்டில் பேண்டிங்க் அண்ட் பெஸ்ட் என்ற கனடா நாட்டு விஞ்ஞானிகள் கூட்டணி இன்சுலின் மூலம் நீரிழிவு நோயை முழுமையாக கட்டுப்படுத்தலாம் என்பதைக் கண்டறிந்தனர். அதுவரை, ஒருவருக்கு நீரிழிவு நோய் வந்தால் மரணம் நிச்சயம் என்கிற நிலைதான் நீடித்தது. இன்சுலினை கண்டுபிடித்த “பேண்டிங்க் அண்ட் பெஸ்ட்” என்ற விஞ்ஞானிகள் கூட்டணியின் தலைவர் பிரெடெங்க் பேண்டிங்கின் பிறந்த நாளான நவம்பர் 14 ஆம் திகதி, ஆண்டுதோறும் உலக நீரிழிவு நோய் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. முதன் முதலில் இது 1991 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படத் தொடங்கியது, தற்போது உலக அளவில் அனுசரிக்கப்படுகிறது.

### தயவு தாட்சண்யம் காட்டாத நோய்

வயது வித்தியாசம், தகைமை, தராதரம், பால் இன பேதம், செல்வம், வறுமை, நகரம் கிராமம் மட்டுமன்றி தயவு தாட்சண்யம் கூட காட்டாது இது வரும்.

## இன்று உலக நீரிழிவு தினம்

எதிரிக்குக் கூட இப்படி ஒரு நோய் வரக்கூடாது என்கின்ற மனமும் ஒருபுறம். நீரிழிவு நோய் வேகமாகப் பரவி வருவதற்கு மக்களின் நடைமுறை வாழ்வியல் கோலங்களும் காரணம்.

உலக நீரிழிவு நோய் தினத்தில் நீரிழிவுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான பிரச்சாரங்கள் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றன. பல்வேறு சுகாதார அமைப்புகளும் மருத்துவமனைகளும், தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும், நீரிழிவு நோய் அமைப்புகளுடன் இணைந்து இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன. உலக அளவில் நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரங்களுக்கு வானொலி, தொலைக்காட்சி, விளையாட்டுப் போட்டிகள், பிரச்சாரங்கள், விழிப்புணர்வுக் கூட்டங்கள், பயிற்சி முகாம்கள், கருத்தரங்குகள் ஆகிய தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அது மட்டுமல்லாமல், ஐக்கிய நாடுகள் சபை இந்த நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தனியான அடையாளச் சின்னம் ஒன்றை வடிவமைத்து வெளியிட்டிருக்கிறது. நீலநிறத்திலான வளையம் நீரிழிவு நோய் தடுப்பின் சின்னமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.எய்ட்ஸ்நோய்க்குஅடுத்தபடியாக நீரிழிவு நோய்க்கு மட்டுமே ஐக்கிய நாடுகள் சபை இப்படித் தனியான ஒரு சின்னத்தை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் மூலம் உலக அளவில் நீரிழிவுநோய் என்பது மிகப் பெரும் ஆள்கொல்லியாக உருவெடுத்து வருகிறது என்கிற ஆபத்தை ஐக்கிய நாடுகள் சபை குறிப்புணர்த்துவதாக நீரிழிவு நோய் நிபுணர்கள் கருதுகின்றார்கள்.

### நோய் பீடிப்பு பலருக்கு தெரிவதேயில்லை

தற்போது உலக அளவில் 18 கோடிக்கு மேற்பட்டோர் நீரிழிவு நோயுள்ளவர்களாக உள்ளனர். இந்த எண்ணிக்கை 2025 இல் 36 கோடியே 50 இலட்சமாக அதிகரிக்கலாம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

முதலிடத்தில் காணப்படும் இந்தியாவில் தற்போது சுமார் 2 கோடியே 50 இலட்சத்திலிருந்து 3 கோடி பேர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இதில் ஆச்சரியம் என்னவென்றால், 2 கோடிப் பேருக்குத் தங்களுக்கு இந்த நோய் இருப்பதே தெரியாமல் இருப்பதுதான் என்றும் ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

இவ்வாறு இந்த நோய் தமக்கு உள்ளமை பற்றி தெரிந்து கொள்ளாதோர் இந்தியாவில் மாத்திரமல்லாமல் மூன்றாம் உலக நாடுகளிலும் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

உலகெங்கும் சுமார் 347 மில்லியன் நீரிழிவு நோயாளிகள் இருக்கின்றனர் என்று உலக சுகாதார நிறுவனம் குறிப்பிடுகிறது.

மரணத்தை ஏற்படுத்தும் நோய்களில் அது, 2030ஆம் ஆண்டுக்குள் ஏழாவது இடத்தைப் பிடித்துவிடுமென்று மதிப்பிடப்படுகிறது.

நீரிழிவு தொடர்பாக கருத்து வெளியிட்ட அமெரிக்க டாக்டர் ஒருவர் “நீரிழிவு உள்ள ஒருவர் தனக்கு நீரிழிவு உள்ளதென்று தெரிந்து கொண்டால், நீரிழிவு என்பது அவருக்கு ஒரு நோயல்ல.” என்று குறிப்பிட்டிருந்தார். இதன் அர்த்தம் நீரிழிவு நோய் உள்ள ஒருவர் தனது கட்டுப்பாட்டின் மூலம் நோயைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம் என்பதாகும். நாம் நோயைக் கட்டுப்பாடாக வைத்திருப்பதற்கு, முதலில் அந்நோயைப்பற்றி முழுமையாக நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். அதாவது நீரிழிவு நோய் என்ன காரணத்தால் ஏற்படுகிறது, அது மனித உடலை எந்த வகையில் பாதிக்கிறது என்பதைப் பற்றிய விளக்கங்களை நோயாளிகள் மட்டுமல்லாது அனைவரும் அறிந்திருத்தல் வேண்டியது இன்றியமையாதது.

### நீரிழிவு என்றால் என்ன?

முதலில் நீரிழிவு என்றால் என்ன என்பது பற்றி சிறிய விளக்கம் ஒன்றை எளிமையான முறையில் பெற்றுக் கொள்வோம். எமது இரத்தத்தில் இனிப்புச்சத்து (குளுக்கோசின் அளவு) வழமையாக இருப்பதிலும் பார்க்க அதிகரிப்பதினாலேயே நீரிழிவு நோய் ஏற்படுகிறது. இக்குளுக்கோசானது நாம் உண்ணும்

(11ஆம் பக்கம் பார்க்க...)

## இன்று உலக நீரிழிவு தினம்

# இனிப்பு நோயின் கசப்பு முகம்

(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உணவிலுள்ள மாப்பொருள் சமிபாடடைந்து குளுக்கோசாக மாற்றப்பட்டு குருதியால் அகத்துறிஞ்சப்படுகிறது. சாதாரண மனிதனின் 100அட குருதியில் 80-120அப குளுக்கோசு காணப்படுகிறது. எமது உடல் இயக்கத்திற்குத் தேவையான குளுக்கோசு எமது உடற்கலங்களுக்குள் உடைக்கப்பட்டுப் பெறப்படுகிறது. குருதியில் உள்ள குளுக்கோசு உடற்கலங்களுக்குள் செல்ல உதவுவது உணவுப்பாதையுடன் தொடர்பாக இருக்கும்.சதையி(Pancreases)எனும்சுரப்பியால் சுரக்கப்படும். "இன்சுலின்" (Insulin) எனப்படும் ஓர் ஓமோன் ஆகும். இவ் இன்சுலின் உடலில் தொழிற்படாது விடுவதால் அல்லது இன்சுலின் சுரக்கும் அளவு குறைவதால் குருதியிலுள்ள குளுக்கோசு உடற்கலங்களுக்குள் செல்வது தடைப்படும். இதனால் குருதியில் குளுக்கோசின் அளவு கூடுகிறது. சாதாரணமாக சிறுநீரகங்கள் (முனை நெல்) குளுக்கோசை சிறுநீருடன் வெளியேற்றுவதில்லை.

குருதியில் குளுக்கோசின் அளவு கூடும் போது அதாவது 100அட குருதியில் குளுக்கோசின் அளவு 180அப றக்கு மேலாகக் கூடும் போது சிறுநீரகங்கள் மேலதிக குளுக்கோசை சிறுநீருடன் வெளியேற்றுகின்றன. இதனை சிறுநீரில் சீனி (Sugar) இருக்கிறது எனக் குறிப்பிடுகிறோம். இவ்வாறு சிறுநீருடன் குளுக்கோசு போகும் போது உடலிலிருந்து அதிகம் நீரும் சேர்ந்தே வெளியேறும். இதனால் வழமையிலும் பார்க்க அதிகளவு சிறுநீர் உண்டாவதால் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனாலேயே இதை நீரிழிவு என்கிறோம். அதிகளவு நீர் வெளியேறுவதால் மிதமிஞ்சிய தாகமும் ஏற்படுகிறது. சிலரின் உடலில் நீரிழிவு நீண்டகாலங்களாகக் காணப்பட்டாலும் கூட நோயாளியின் அறியாத்தன்மை காரணமாக தனக்கு நீரிழிவு உள்ளது என்பதை நோயாளி உணர்ந்து கொள்வதில்லை. இதனால் பல பாரதூரமான விளைவுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு.




### அறிகுறிகள்

எனவே நீரிழிவு நோயின் மூலமான அறிகுறிகள் சிலதை நோக்குவோம்.

1. அடிக்கடி சிறுநீர் கழித்தல், வழமைக்கு மாறாக இரவிலும் பல தடவை சிறுநீர் கழிக்க வேண்டிய நிலை ஏற்படல்.

2 அடிக்கடி தாகம் ஏற்படல்.

3. அசாதாரண பசி ஏற்படல்.

4. உடல் சோர்வாக இருத்தல்.

5. உடல் நிறை குறைந்து கொண்டு போதல்.

6. தலை சுற்றுதல், மயக்கம் போன்றன அடிக்கடி ஏற்படல்.

7.கை, கால்களில் விறைப்புத் தன்மை ஏற்படுதல்.

8. தேகத்தில் பருக்களும், கட்டிகளும் தோன்றல்.

9. ஆண், பெண் இனப்பெருக்க உறுப்புகளில் கூடிய அழற்சி ஏற்படல்.

10. கண் பார்வை குறைவடைதல்.

11. புண்கள் ஏற்படின் அவை ஆறுவதற்கு வழமையிலும் கூடிய நாள்கள் எடுத்தல்.

12. எளிதில் கோபமடைதல்.

- மேற்குறிப்பிட்ட அறிகுறிகளில் சிலவற்றை சிலகாலமாக நீங்கள் அவதானித்தால் அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று சிறுநீர்ப்பரிசோதனை செய்வதன் மூலம் அந்நோய் இருக்கின்றதா என்பதை அறிந்து கொள்ளலாம்.

பின்பு இரத்தப்பரிசோதனை செய்வதன் மூலமே இந்நோயை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

நீரிழிவு நோய் காணப்படுமிடத்து டாக்டரை அணுகி உரிய சிகிச்சை முறைகளை மேற்கொள்ளல் அவசியமாகும்.

### நான்கு வகை நீரிழிவு

பொதுவாக நீரிழிவு நோயினை நான்காக வகைப்படுத்தலாம். அதாவது, முதல் வகை நீரிழிவு நோய், இரண்டாம் வகை நீரிழிவு நோய், கர்ப்பகால நீரிழிவு நோய், சதையியில் (Pancreases) ஏற்படும் கற்களால் உருவாகும் நீரிழிவு நோய் என்ற அடிப்படையில் நான்கு வகையான நீரிழிவு நோய்களே தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தவர்களில் 98 சதவீதமானவர்களை பாதிக்கின்றன்ச்ன எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

### முதல் வகை

முதல் வகை நீரிழிவு நோய் என்பது பெரும்பாலும் குழந்தைகளைத் தாக்கும் தன்மை கொண்டது. இதனால் சில மருத்துவர்கள் இதை குழந்தைகளின் நீரிழிவு நோய் என்றும் அழைக்கிறார்கள். குழந்தை பிறந்தது முதல் முப்பது வயது வரை தாக்கும் தன்மை கொண்டது எனப்படுகின்றது. இந்த முதல் பிரிவு நீரிழிவு நோய் ஏன் ஏற்படுகிறது என்பது தொடர்பில் தெளிவான, உறுதியான ஆராய்ச்சி முடிவுகள் எட்டப்படவில்லை. மனிதர்களின் உடம்பில் இயற்கை







(12ஆம் பக்கம் பார்க்க...)

## இன்று உலக நீரிழிவு தினம்



# இனிப்பு நோயின் கசப்பு முகம்

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

யிலேயே இருக்கும் நோய் எதிர்ப்புத் தன்மையானது, திடீரென்று சதையியைத் (Pancreases) தாக்கி அதில் இருக்கும் இன்சுலின் சுரக்கும் சுரப்பிகளை அழித்து விடுகிறது. இதனால் இன்சுலின் சுரக்கும் தன்மையை சதையி இழந்துவிடுகிறது. இப்படி மனித உடம்பின் ஒரு பகுதி கலங்கள், இன்னொரு பகுதிக் கலங்களை ஏன் தாக்குகின்றன என்பதற்கு இதுவரை உறுதியான காரணங்கள் தெரியவில்லை. ஒருவகையான வைரஸ் தாக்குதல் காரணமாகவே இப்படி நடப்பதாக அண்மைக்கால கண்டுபிடிப்புகள் கூறினாலும் அந்தக் குறிப்பிட்ட வைரஸை இனம் காண்பதற்கான ஆய்வுகள் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அதனால், இந்த முதல் வகை நீரிழிவு நோயைப் பொறுத்தவரை, இது ஒருவருக்கு வந்தால் அவருக்கு ஆயுள்காலம் முழுமைக்கும் இன்சுலின் ஊசிமூலம் குளுக்கோசின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது சிறந்த வழியாகக் கூறப்படுகின்றது.

### இரண்டாவது வகை

உலகளாவிய ரீதியில் எண்ணிக்கை அடிப்படையில் பெரும்பாலானவர்களை பாதிப்பது இரண்டாவது வகை நீரிழிவு நோயாகும். இந்த இரண்டாவது வகை நீரிழிவு நோயைப் பொறுத்தவரை, அது ஒருவருக்கு வருவதற்கு பல காரணங்கள் காணப்படுகின்றன. பெற்றோருக்கு நீரிழிவு நோய் இருந்தால் அவர்களின் பிள்ளைகளுக்கு நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்புகள் 80 சதவீதம் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. அது தவிர கூடுதல் உடல் பருமன், அதிகபட்ச கொழுப்புச்சத்துள்ள உணவுகள் சாப்பிடுவது, உடற்பயிற்சியற்ற வாழ்க்கைமுறை போன்ற காரணிகள், ஒருவருக்கு நீரிழிவு நோயை வரவழைப்பதில் முக்கிய பங்காற்றுவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### மூன்றாவது வகை

மூன்றாவது வகையான கர்ப்பகால நீரிழிவு நோய். சில பெண்களுக்கு கர்ப்பகாலத்தில் தற்காலிகமாக வருவது. கர்ப்பகாலத்தில் பெண்களின் உடல் எடை அதிகரிப்பதாலும், கருவில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சி காரணமாகவும், பெண்களுக்கு கூடுதலாக இன்சுலின் தேவைப்படுகிறது. பெரும்பாலானவர்களுக்கு இந்த கூடுதல் இன்சுலின் இயற்கையாகவே சுரந்தாலும், சில பெண்களுக்கு இது சுரப்பதில்லை. அதனால் அவர்களின் இரத்தத்தில் குளுக்கோசின் அளவு அதிகரித்து, அவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படுகிறது. இவர்களின் கர்ப்பத்தின் இறுதியில் குழந்தை பிறந்ததும் இவர்களில் பலருக்கு நீரிழிவு நோய் இல்லாது போய்விடும்

### பிரசாரங்கள்

ஐ.நா. சபை, நீலநிறத்திலான வளையம் அடையாளச் சின்னமாக வெளியிட்டு இந்த நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. சர்வதேச ரீதியில் இந்த நீரிழிவு நோய் குறித்த பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. வயது வித்தியாசம், இன பேதம் என தயவு தாட்சண்யம் பார்க்காமல் இன்றைய நாளில் சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு சுகாதார அமைப்புகளும் மருத்துவமனைகளும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், நீரிழிவு நோய் அமைப்புகளுடன் இணைந்து இத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு தருகின்றன. வானொலி, தொலைக்காட்சி என தொடர்பு சாதனங்கள் இதற்கு ஒத்துழைப்பு தருகின்றன.

### இன்சுலின் குறைவால் வரும் நீரிழிவு நோய்

இன்சுலின் என்ற முக்கிய ஹார்மோன் உற்பத்தியாவதிலும், அதன் செயல்பாடுகளில் குறை நேர்வதாலும் இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு அதிகரித்து நீரிழிவு நோய் ஏற்படுகிறது. உலக அளவில் இந்தியா தான் நீரிழிவு நோயில் முதல் இடத்தில் உள்ளது. பொதுவாக, நீரிழிவு நோய் என்பதை பற்றிய விளக்கங்களை நோயாளிகள் மட்டுமில்லாது அனைவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். பெற்றோர் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டிருப்பதால் 80 வீதமான பிள்ளைகளுக்கும் இந்த நோய் வரும் என்பது ஆய்வு கருத்து.

### தடுப்பதில் அதிக கவனம் செலுத்துவோம்

மரபணு குறைபாடு, சுற்றுப்புறம் மற்றும் உடலின் சுய எதிர்ப்பு தன்மை இவற்றால் வரும் நீரிழிவு நோய்க்கு எவ்வித தடுப்பும் உபயோகிக்கப்படாது. மனிதகுலத்தில் எண்ணற்ற நோய்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டாலும் மனிதனின் உடலை சிறிது சிறிதாக பாதிப்புக்கு உள்ளாக்குவது, நீரிழிவு நோய்தான். ஆராய்ச்சிகள் பல செய்யப்பட்டாலும், ஒவ்வொரு முறையும் புதுபுது தகவல்கள் கூறப்படுவதால், நாம் நீரிழிவு நோயை கட்டுப்படுத்த என்னதான் வழிமுறைகளை எடுத்துக் கொண்டாலும், அதனை வராமல் தடுப்பதிலேயே அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

### உணவு வகைகள்

பலரும் இன்று ஓட்ஸ், கோதுமை சப்பாத்தி என மாறி வருகிறார்கள். இப்படி அரிசியை முற்றிலுமாகத் தவிர்ப்பது ஆரோக்கியமானது அல்ல

ஓட்ஸ் மற்றும் கோதுமை கூட பட்டை தீட்டப்பட்டிருந்தால் அதன் மூலம் சர்க்கரையின் அளவு அதிகரிக்கலாம். எதைச் சாப்பிடுவதென்றாலும், அது சிவப்பு அரிசி, முழு கோதுமை ரொட்டி அல்லது ஓட்ஸ் தவிடு நீக்கப்படாத முழு தானியமாக இருப்பது நல்லது.

கலோரிகளைக் கூட்டும் விருந்து என்பது எப்போதாவது என்பது போய் இப்போது "வீக் என்ட் பார்ட்டிகள்" இளைஞர்களிடையே அதிகரித்து வருகின்றன.

கண்டிப்பாக இத்தகைய வீக் என்ட் விருந்துகளால் சிக்கல்தான். இவை சசர்க்கரை அளவை உயர்த்தத் தவறுவதில்லை. காரணம், இத்தகைய பார்ட்டிகளில் நொறுக்குதீனிகளான சிப்ஸ், நாக்கோஸ் மற்றும் எண்ணெயில் பொரிக்கப்படும் ஸ்டார்ட்டர் வகை உணவுப் பண்டங்களே அதிகம் பரிமாறப்படுகின்றன. இதுவே, ஆரோக்கியமான, சத்தான உணவு வகைகளைக் கொண்ட சாலட்டுகள், முழு தானியங்கள், பாதாம், முந்திரி போன்ற புரதம் நிறைந்த உணவுகள் கொண்ட பார்ட்டிகள் என்றால் ஆரோக்கியமானதும் கூட.

### கர்ப்ப கால சர்க்கரை நோய்

இதற்குப் பெயர் கர்ப்பகால நீரிழிவு என்பதாகும். கர்ப்பகாலத்தில் உடலில் நிகழும் ஹார்மோன் மாறுபாடுகளாலே சர்க்கரை நோய் வருகிறது. கர்ப்பிணிப் பெண்ணின் பெற்றோருக்கு சர்க்கரை இருப்பின், மரபு ரீதியாக அவருக்கும் சர்க்கரை பாதித்து அது கர்ப்பகாலத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. சர்க்கரை பாதித்த கர்ப்பிணிகளின் உடலில் உள்ள

(13ஆம் பக்கம் பார்க்க....)

# இனிப்பு நோயின் கசப்பு முகம்

(12ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தா விட்டால் அது குழந்தையைப் பாதிக்கும். மேலும் கருச்சிதைவு மற்றும் குழந் தையின் உடலில் பிறவி ஒழுங்கின் மையை ஏற்படுத்தலாம்.பொதுவாக, இவ்வகை கர்ப்பகாலத்தில் வளரும் சர்க்கரை குழந்தை பெற்ற பின்பு தாய்க்கு சரியாகிவிடும். ஆனால், குழந்தை பெற்ற பின்பு 5 - 10 ஆண்டுகளில் அந்த தாய்க்கு திரும்பவும் நீரிழிவு வருவதற்கு 50 - 70 வீதம் வாய்ப்புண்டு. எனவே, ஆரோக்கியமான உணவுத் திட்டத்தின் மூலமும் முறையான குழந்தை பெற்ற பின்பு உடற்பயிற்சிகளை மேற்கொண்டு உடல் எடையை சரியாகப் பேணுவதன் மூலமும் நீரிழிவுத் தாக்குதலைக் கட் டுப்படுத்தலாம்.குழந்தை பெற்ற பின்பு 4 - 6 வாரத்திலும் பின்பு ஒவ்வோர் ஆண்டும் சர்க்கரைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

**நான்காவது வகை**

நான்காவது வகையான நீரிழிவு நோயை பொறுத்தவரை, சதையி யில் ஏற்படும் கற்கள் காரணமாக இது உருவாகிறது. இது உருவாவதற்கு போஷாக்கின்மை உள்ளிட்ட பல்வேறு வகையான சுற்றுப்புற காரணங்கள் இருப்பதாக கூறப்பட்டாலும், இதற்கான பிரதான காரணி எது என்பது குறித்து இன்னமும் ஆய்வுகள் தொடர்கின் றன.

நீரிழிவினால் ஏற்படும் தீய விளை வுகள் பற்றியும் தெரிந்து வைத்திருத் தல் வேண்டும். ஒரு நீரிழிவு நோயாளி நோயைக் கட்டுப்பாடாக வைத்திருப்ப தில் கவனம் செலுத்துவது குறைவடைந் தால் அவர் பாராதூரமான பின்விளைவு களை எதிர்நோக்க வேண்டிய கட்டாயத் திற்கு ஆளாவார். இது காலப்போக் கில் உடலில் பல்வேறு தொகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

1. குறைந்த இன்சுலின் தொழிற்பட் டால் ஏற்படும் விளைவுகளால் குருதிக் குழாய்களில் அடைப்பு ஏற்படலாம். இதனால் காலப்போக்கில் குருதி ஓட்டம் குறைவடைவதனால் மாரடைப்பு, உயர்இரத்த அழுத்தம் போன்ற இதய நோய்கள் தோன்றலாம்.

2. குறைந்த குருதி விநியோகம் மற்றும் பல காரணங்களால் நரம்புகள் பாதிக்கப்பட்டு உடலின் புலனுணர்வு பாதிக்கப்படும்.

3. விழித்திரையில் மாற்றத்தினால் (Retinopathy) கண்வில்லையில் ஏற்படும் மாற்றத்தினாலும் (Cataract) கண்பார்வை இல்லாது போகும் அபாயம் ஏற்படல்.

4. பாலியல் உறுப்புக்கள், சிறுநீரகம், கை, கால், தோல் பகுதிகளில் தொற்று நோய்கள் ஏற்படலாம். பிரதானமாக இந்நோய்களில் Candida எனப்படும் பங்கசு நோய் ஏற்படும்.

5. சிறுநீரகத்தில் சிக்கல் ஏற்படலாம் அல்லது இயங்க மறுக்கலாம்.

6.குறைந்த குருதி விநியோ கம் நரம்புப் பாதிப்புகளால் பிரதான மாக கால்களில் பாதிப்புகள் ஏற்படல். குறைந்த புலனுணர்வால் நடப்பதில் கஷ்டம் ஏற்படுவதுடன் பாதப்பகுதியில் நோயாளர்கள் உணர முடியாமலேயே புண்கள் தோன்றலாம். இவ்வகைப் புண்கள் குணமடையாது போகின் பாதிக்கப்பட்ட கால் பகுதிகள் வெட்டிய கற்ற வேண்டிய நிலை ஏற்படலாம்.




## இன்று உலக நீரிழிவு தினம்

**நோயைக் கட்டுப்படுத்தும் முறைகள்**

1. சில நோயாளர்களுக்கு இந்நோயை உணவுக்கட்டுப்பாடுகளின் மூலமும்.

2. சிலருக்கு உணவுக்கட்டுப்பாடுடன் மருந்து, மாத்திரைகள் உட்கொள்வதன் மூலமும்

3. சிலருக்கு உணவுக்கட்டுப்பா டுகளுடன் இன்சுலின் ஊசி ஏற்றுதல் மூலமும்

**கட்டுபாட்டில் வைத்திருக்கலாம்.**

நீரிழிவு நோய் உள்ளவர்கள் 16 வீத மக்கள் இன்சுலின் உபயோகிக் கிறார்கள். மற்றவர்களில் 54 வீதத் தினர் மாத்திரைகளும், 17 வீதத்தி னர் இரண்டும் உபயோகிக்கிறார்கள் எனப் புள்ளி விவரங்கள் குறிப்பிடுகின் றன.

**கவனிக்க வேண்டியவை**

நீரிழிவு நோய்களுக்காகச் சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்போர் கவனிக்க வேண்டியவை:

1. வைத்தியரின் ஆலோசனைப்படி உணவுக்கட்டுப்பாட்டை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

2. வைத்திய ஆலோசனைப்படி குளிசையை அல்லது இன்சுலின் ஊசியை ஒழுங்காக எடுக்க வேண் டும்.

3. மருந்து எடுத்து அல்லது ஊசி ஏற்றி அரைமணி நேரத்திற்குள் (30 நிமிடம்) உணவை உட்கொள்ளுதல் வேண்டும்.

4. சில சந்தர்ப்பங்களில் மருந்த எடுத்த பின் உணவு உட்கொள்ளத்தவறி னால் அல்லது மேலதிகமாக மருந்தை உட்கொண்டாலோ களைப்பு, பசி, மயக கம், தலைச்சுற்று, நெஞ்சுப்படபடப்பு, அதிகளவு வியர்த்தல், உடல் குளிர்தல் போன்ற அறிகுறிகள் தென்படும். இப் படியான சந்தர்ப்பங்களில் குளுக்கோசு அல்லது வேறு இனிப்பு வகைகள் உடன டியாக உட்கொள்ளல் அவசியமாகும். இதனால் சிறிதளவு இனிப்பு வகைகளோ அல்லது குளுக்கோசோ எந்த நேர மும் உங்களுடன் வைத்திருத்தல் நன்று. (குறிப்பாக இன்சுலின் அதி களவில் உடலில் ஏற்றிக் கொள்ப வர்கள்)

மேலும் நீரிழிவு நோயாளிகள் வெளி யிடங்களுக்குத் தனியே செல்லும் போது தான் ஒரு நீரிழிவு நோயாளி என்பதை தெரிவிக்கும் விவரமடங்கிய குறிப் பொன்றை தன்னுடன் வைத்திருத்தல் பாதுகாப்பு மிக்கதாகும்.

5. தினமும் தேகாப்பியாசம் செய்தல் வேண்டும்.

6. உடல் சுத்தத்தைப்பேணல் வேண் டும். பிரதானமாக பாதங்களைச் சுத்த மாகவும் உலர்ந்ததாகவும் பேண வேண் டும். நீரிழிவு நோயுள்ளவர்கள் தனது கால்களையும், கால் நகங்களையும் தினம் தோறும் அவதானித்து கொள்ளல் வேண்டும்.

7. உணவுக்கட்டுப்பாடின்றி உண் பதன் மூலமோ அல்லது மருந்துகளை ஒழுங்கீனமாக பாவிப்பதன் மூலமா கவோ குருதியில் குளுக்கோசின் அளவு அதிகமாகி வயிற்றுப் புரட்டல், நாவ றட்சி, மயக்கம் போன்றன ஏற்படலாம். அப்படி ஏற்படின் உடனடியாக மருத்து வரை நாடல் வேண்டும்.

நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளவர்கள், எச்சந்தர்ப்பத்திலும் மிகவும் அவதான மான முறையில் தமது உடல் ஆரோக் கியத்தைப் பேணிக்கொள்வதுடன், உணவு முறைகளையும் கட்டுப்பாட் டினுள் வைத்திருப்பது மிகவும் இன்றிய மையாததாகும்.

# தீபாவளி பண்டிகை காரணமாக காற்று மாசுபாடு மேலும் அதிகரிப்பு



தீபாவளி பண்டிகையை அடுத்து சென்னையின் பல இடங்களில் காற்று மாசு அதிகரித்தது. பல இடங்களில் காற்றின் தரக்குறியீடு 100 ஐ தாண்டியது.

தீபாவளி பண்டிகையன்று பாதுகாப்பான முறையில் பட்டாசு வெடிக்க பல்வேறு கட்டுப்பாடுகளை சென்னை பொலிஸ் அறிவுறுத்தியிருந்தது.

தீபாவளி பண்டிகை தினத்தில், உச்ச நீதிமன்ற அறிவுறுத்தலின்படி அனுமதிக்கப்பட்ட சுற்றுச்சூழலுக்கு உகந்த ரசாயனப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட பசுமை பட்டாசுகள் மட்டும் விற்கப்படவும், வெடிக்கப்படவும் வேண்டும் என்று பொலிஸ் அறிவுறுத்தியிருந்தது. மேலும், காலை 6 முதல் 7 மணி வரையிலும், இரவு 7 முதல் 8 மணி வரையிலும் என்று 2 மணி நேரங்கள் மட்டுமே பட்டாசு வெடிக்க வேண்டும் என கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது.

அதே சமயம் நேற்று முன்தினம் காலை முதலே சென்னையில் காற்று மாசுபாடு அதிகரித்து காணப்பட்டுள்ளது. அரசின் விதிப்படி, குறிப்பிட்ட நேரங்களில் அனைவரும் பட்டாசு வெடிக்கத் தொடங்கியதை அடுத்து சென்னையில் காற்று மாசு மேலும் அதிகரித்தது. சென்னையின் அனைத்து இடங்களிலும் காற்றின் தரக்குறியீடு 100ஐ தாண்டியது.

குறிப்பாக, சென்னை அசோக் நகர் ஸ்ரீதேவி காலனியில் -147, கொடுங்கையூர் பகுதியில் - 150 என்ற அளவை தாண்டிச் சென்றது. சென்னையின் பல பகுதிகளிலும் இதே நிலைதான். எனினும், ராயபுரம், அண்ணா சாலை போன்ற ஒரு சில இடங்களில் மட்டும் 100க்கும் குறைவாக இருந்தது.

இதேவேளை, தமிழகம் முழுவதும் நேராக கட்டுப்பாட்டை மீறி பட்டாசு வெடித்த குற்றச்சாட்டில் 2,206 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக பொலிஸ் தலைமை இயக்குனர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அறிவிக்கப்பட்ட நேரத்தை தவிர்த்து மற்ற நேரங்களில் பட்டாசு வெடித்த காரணத்திற்காக மாநிலம் முழுவதும் 2,246 பேர் மீது பதிவு செய்யப்பட்டது. அதில் 2,095 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதில் அதிகபட்சமாக சென்னையில் 558 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. விதிமுறைகளை மீறி செயல்பட்ட குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட 2005 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கேரளா குண்டு வெடிப்பு சம்பவம்: பலியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு



கேரளாவில் கிறிஸ்தவ ஜெபக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 5 ஆக அதிகரித்துள்ளது.

எர்ணாகுளம் மாவட்டத்தில் உள்ள மலயாட்டூரைச் சேர்ந்த 45 வயதான சாலி பிரதீபன் என்ற பெண் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என கேரள அரசு அறிவித்துள்ளது.

வென்டிலேட்டர் ஆதரவுடன் சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். குண்டு வெடிப்பு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மேலும் 17 பேர் பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் எட்டு பேர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர், ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளனர், மீதமுள்ள ஒன்பது பேர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

கேரளா மாநிலம், எர்ணாகுளம் மாவட்டம் களமச்சேரி பகுதியில் உள்ள மதவழிபாட்டு தளத்தில் கடந்த 29 ஆம் திகதி காலை 9 மணியளவில் நடந்த குண்டு வெடிப்பு மக்களை அச்சத்தில் ஆழ்த்தியது. இந்த கூட்டத்தில் மூன்று இடங்களில் பயங்கர வெடி விபத்துகள் ஏற்பட்டன. இந்த விபத்தில் 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். பின்னர் 12 வயது சிறுமி லிபினா சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மேலும் இந்த விபத்தில் 50-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக, குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் சோதனை நடத்த தேசிய புலனாய்வு அமைப்புக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உத்தரவிட்டார். இதையடுத்து, இந்த விவகாரம் குறித்து என்.ஐ.ஏ உள்ளிட்ட புலனாய்வு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சராக முன்னாள் பிரதமர் டேவிட் கெமரூன் நியமனம்!



பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சராக முன்னாள் பிரதமர் டேவிட் கெமரூன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவின் தற்போதைய பிரதமர் ரிஷி சுனக்கின் உத்தரவின் பேரில் இவர் வெளியுறவுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

டேவிட் கெமரூன் 2010 முதல் 2016 வரை பிரித்தானிய பிரதமராக பதவி வகித்துள்ளார்.

கிட்டத்தட்ட 6 ஆண்டுகளுக்கு பின்னர் முக்கிய பொறுப்புக்கு கெமரூனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கெமரூனின் திடீர் நியமனம் அரசியல் பார்வையாளர்களிடையே பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, பிரித்தானிய உள்துறை அமைச்சர் சுயாலா பிரேவர்மேன் பதவி நீக்கம் செய்யப்பட்டார். கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் உள்துறை அமைச்சராக இருந்து வந்த அவரை பதவி நீக்கம் செய்து அந்நாட்டு பிரதமர் ரிஷி சுனக் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

அண்மையில் நடந்த பாலஸ்தீன ஆதரவுப் போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதை பொலிஸார் தவறிவிட்டனர் என விமர்சித்ததால் சுயாலா பிரேவர்மேன் சர்ச்சையில் சிக்கினார். அவரை பதவி நீக்கம் செய்ய பிரதமர் ரிஷி சுனக்குக்கு கடுமையான அழுத்தங்கள் இருந்த நிலையில், நேற்று அமைச்சரவை விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக சுயலா நீக்கப்பட்டுள்ளார்.

சுயாலா பிரேவர் மேன் கன்சர்வேடிவ் கட்சியில் நன்கு அறியப்பட்டவராகவே இருந்தார். ஆனால், அவரது விமர்சனத்துக்குப் பிறகு உட்கட்சியிலேயே அவருக்கு எதிர்ப்பு எழுந்தது.

பொலிஸார் இரட்டை வேடம் போடுகின்றனர் என அவர் விமர்சித்தது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த நிலையில், அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு, அவருக்குப் பதிலாக ஜேம்ஸ் க்ளெவர்லி உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் லண்டனில் இடம்பெற்ற பாலஸ்தீன ஆதரவு பேரணிகளை பொலிஸார் சரிவர கட்டுப்படுத்தவில்லை என்று கூறிய சுயாலா பிரேவர்மேன் அந்தப் பேரணிகளை வெறுப்புப் பேரணிகள் என்றும் கூறியிருந்தார்.

இது பிரித்தானிய அரசியலில் சர்ச்சையைக் கிளப்பியது. நேற்று முன்தினம் லண்டனில் வலதுசாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுயலா பிரேவர்மேன் பேச்சால் பதற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கூறி, அவருக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது.

# இந்தியாவுடனான தூதரக மோதல்: கனடா பிரதமர் மீண்டும் எச்சரிக்கை

பெரிய நாடுகள் விளைவுகள் எதையும் எதிர்கொள்ளாமல் சர்வதேச சட்டத்தை மீறுகின்றன என்றால் உலகம் அனைவருக்கும் மிக ஆபத்தான ஒன்றாக மாறும் என கனேடிய பிரதமர் ட்ரூடோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவுடனான தூதரக மோதல் நீடிக்கும் நிலையிலேயே, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

காலிஸ்தானி அமைப்பை சேர்ந்த ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் இந்திய அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாக ட்ரூடோ குற்றம் சாட்டியதிலிருந்து இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது.

45 வயதான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன் மாதம் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள குருத்வாராவிற்கு வெளியே சுட்டுக்



கொல்லப்பட்டார்.

ஆனால் பிரதமர் ட்ரூடோவின் குற்றச்சாட்டுகளை மொத்தமாக மறுத்த இந்தியா அவரது குற்றச்சாட்டுகள் அபத்தமானது என்று குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையிலேயே ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ட்ரூடோ, கனேடிய மண்ணில் கனேடிய குடிமகன் கொல்லப்பட்டதில் இந்திய அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் என்ற நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் ஆரம்பத்திலிருந்தே எங்களுக்குத் தெரிந்தபோது, இந்த விடயத்தின் உண்மைத்தன்மையை அறிய எங்களுடன் இணைந்து பணியாற்றுமாறு நாங்கள் இந்தியாவை அணுகினோம்.

அதுமட்டுமின்றி, அமெரிக்கா போன்ற எங்கள் நண்பர்கள் மற்றும் நட்பு நாடுகளையும் நாங்கள் அணுகினோம்.

கனடா எப்போதும் சட்டத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ள நாடு. பெரிய நாடுகள் விளைவுகள் எதையும் எதிர்கொள்ளாமல் சர்வதேச சட்டத்தை சர்வ சாதாரணமாக மீறுகிறது என்றால் உலகம் அனைவருக்கும் மிக ஆபத்தான ஒன்றாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

மேலும், இந்தியாவுடன் ஆக்கப்பூர்வமாக செயல்பட கனடா முயற்சித்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.



# இன்று கந்தசஷ்டி விரதம் ஆரம்பம்

-விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா-
(காரைதீவு நிருபர்)

முருகப்பெருமானை நினைத்து அவர் அருள் பெற வழிபடுகின்ற விரதங்களில் கந்த சஷ்டி விரதம் முக்கியமானதாகும்.

முருகனுடைய விரதங்களுள் கந்த சஷ்டி விரதம், கார்த்திகை விரதம், வெள்ளிக்கிழமை விரதம் ஆகிய மூன்றும் பிரதானமானவையாகும்.

கந்தசஷ்டி விரதம் இன்று 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது.

18ஆம் தேதி சூரசம்கார நிகழ்ச்சி இடம் பெற்று 19ஆம் தேதி திருக்கல்யாண நிகழ்வோடு விரதம் நிறைவு பெறுகிறது.

கந்தப்பெருமான் சூரனை சங்கரித்த பெருமையைக் கொண்டாடுவதே ஸ்கந்தஷஷ்டி விரத விழாவாகும். ஐப்பசி மாதத்தில் வரும் வளர் பிறை சஷ்டி அன்றுதான் முருகப் பெருமான் சூரபத்மனை அழித்த நாள்.

முருகன் கோயில் கொண்டுள்ள எல்லா ஆலயங்களிலுமே ஸ்கந்தசஷ்டி விரதம் மிகச் சிறப்பாக ஆறு நாள்கள் அனுஷ்டிக்கப் படுகின்றது.

### கந்தசஷ்டி விரத மகிமை

கலியுகக் கடவுளாகக் கந்தப் பெருமான் போற்றப்படுகின்றார். மனித மனம் விரதத்தின் போது தனித்து, விழித்து, பசித்து இருந்து ஆறு வகை அசுத்தங்களையும் அகற்றி, தூய்மையை அடைகின்றது. தூய உள்ளம், களங்க மற்ற அன்பு, கனிவான உறவு என்பவற்றிற்கு அத்திவாரமாக கந்த சஷ்டி விரதம் அமைகிறது.

கொடுங்கோலாட்சி செலுத்திய ஆணவத்தின் வடிவமாகிய சூரனையும், கன்மத்தின் வடிவமாகிய சிங்கனையும், மாயா மலத்தின் வடிவமாகிய தாரகனையும், அசுர சக்திகளையெல்லாம் கலியுக வரதனான கந்தப் பெருமான் அழித்து, நீங்காத சக்தியை நிலை நாட்டிய உன்னத நாளே கந்த சஷ்டியாகும்.

### கந்தசஷ்டி விரதத்தை எவ்வாறு அனுஷ்ட்டிப்பது?

ஐப்பசித் திங்கள் சதுர்த்தசித் திதியில் வளர் பிறை பிரதமை முதல் சஷ்டி வரை ஆறு நாள்களும் கந்தப் பெருமானை நினைத்து வழிபட்டு விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

உபவாசம் இருப்பது அதி உத்தமம் எனக் கருதப்படுகின்றது. மிளகை விழுங்கி, பழம் மட்டும் சாப்பிட்டு, தீர்த்தம் குடித்து, இளநீர் குடித்து, ஒரு நேர உணவு மட்டும் உண்டு, அவரவர் தேக நிலைக்கேற்ப கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஆறாவது நாளான கந்தசஷ்டியன்று பூரண உபவாசம் இருத்தல் வேண்டும். விரதம் ஆரம்பமான தினத்தில் ஆலயம் சென்று சங்கல்ப்பம் செய்து காப்புக் கட்டி விரதத்தைத் தொடங்குவார்கள்.

கந்த சஷ்டி விரதம் தொடர்ந்து ஆறு வருடங்களும், கார்த்திகை விரதம் பன்னிரெண்டு வருடங்களும் வெள்ளிக்கிழமை விரதம் மூன்று வருடங்களும் அனுஷ்டிக்கப்படுகின்றன.

அசுர சக்திகளின் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை மட்டுமன்றி ஆறுவகை எதிரிகளான காமம்,கோபம்,பேராசை, செருக்கு, மயக்கம்,பெருமை ஆகிய வகைகளை அழித்து, முற்றுணர்வு, வரம்பிலாற்றல், தன் வயமுடைமை, வரம்பின்மை, இயற்கையுணர்வு, பேரருள் ஆகிய தேவ குணங்களை நிலை நாட்டியதால் கந்த சஷ்டி விரதமே பெருவிழாவாக எடுக்கப்படுகின்றது.

ஏனைய விரத அனுட்டானங்களை போலன்றி கந்த சஷ்டி விரதானுஷ்டானத்தை பெருவாரியான ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் கடைப்பிடிக்கின்றார்கள். மாணவர்கள் படிப்பிற்கும், குடும்பப் பெண்கள் குடும்ப நன்மைக்கும், கன்னிப் பெண்கள் நல்ல கணவனை வாழக்கைத் துணையாக அடைய வேண்டியும், குழந்தை இல்லாதோர் குழந்தை வேண்டியும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

### ஞான சக்திக்கும் அசுர சக்திக்கும் இடையேயான போர்

சூரன், சிங்கன், தாரகன் முதலிய அசுரர்கள் நெடுங்காலமாக தேவர், மனிதர் யாவரையும் துன்புறுத்தி அழித்து வந்தனர். பரமசிவன் இதற்கொரு முடிவு காணும் நோக்கில், தனது சக்தியையே முருகப் பெருமானாகப் பிறப்பித்தார்.

அந்த முருகப் பெருமான் இந்த சூரபது மாதி அசுரர்களுடன் ஆறு நாவ்கள் போரிட்டு வென்றார். இந்த அருட் பெருங்கருணைச் செயலை வியந்து இப்போர் நிகழ்ந்த காலமாகிய ஐப்பசி மாத வளர்பிறை முதல் ஆறு நாள்களையும் விரத நாள்களாகக் கொண்டு முனிவரும் தேவரும் நோற்று வந்தனர். இதுவே கந்த சஷ்டி என்ற பேரில் பூலோக மாந்தரும் அனுஷ்டிக்கக் கிடைத்தது.

### கந்தசஷ்டி விரத பயன்கள்

இவ்விரதத்தின் போது, தினமும் கந்த சஷ்டி கவசம், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருப்புகழ், கச்சியப்ப சுவாமிகளின் கந்த புராணம் ஆகியவற்றைப் பாராயணம் செய்வதால், என்னவென்று சொல்ல முடியாத சாந்தி, மனஅமைதி, நிலவும். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்திருப்பர்.

சஷ்டி விரத ஆறு நாள்களும் கந்தப் பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயங்களில் எல்லாம் பூரண கும்பம் வைத்து விஷேட அபிஷேகமும், சண்முகார்ச்சனையும், கந்த புராணப்படிப்பும் நடைபெறும்.

விரதம் முடிவுற்ற அன்று முருகன் ஆலயத் தில் சூரன் போர் நடைபெற்று, மறுநாள் விரதம் அனுஷ்டித்த அனைவரும் விரத பூசையைப் பாறணை செய்துநிறைவுசெய்கின்றனர். பாறணை பண்ணும் அன்று ஆறு பேருக்கு அன்ன தானம் வழங்கி உட்கொள்ள வேண்டும்

அத்தகைய மகிமை வாய்ந்த கந்த சஷ்டி விரதத்தை அனுஷ்டித்து நாமும் பயன்பெறுவோமாக.



# திருமலையில் வெள்ளப் பாதிப்பு

**- எஸ்.கீதபொன்கலன், அப்துல் யாசிம் -**

திருகோணமலையில் பெய்த காற்றுடன் கூடிய மழையின் காரணமாக சில வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

திருகோணமலையில் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் காற்றுடன் கூடிய மழையின் காரணமாக பல தாழ்நிலப்பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை பெய்த காற்றுடன்கூடிய மழையின் காரணமாக வெருகல் ஊப்பூறல் கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆறு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார். மேலதிக சேதங்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் திருகோணமலை நகரை அண்மித்த கன்னியா, பீலியடி பகுதி உட்பட பல பகுதிகளில் வெள்ள நீர் உட்புகுந்துள்ளதன் காரணமாக பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வடிகான் அமைக்கப்படாததன் காரணமாக வெள்ள நீர் வீட்டுக்குள் புகுந்துள்ளதாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பலமுறை தெரிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.







# சரக்கு ரயில் பெட்டியை உடைத்து திரிபோஷா திருடிய இருவர் கைது

**(கனகராசா சரவணன்)**

**மட்டக்களப்பில் சம்பவம்**

மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் நிறுத்த. வைக்கப்பட்டிருந்த ரயில் பெட்டியை உடைத்து 750 பக்கற் திரிபோஷா மா பக்கற்றுக்களை திருடிச் சென்ற இருவரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தாங்கள் கைது செய்துள்ளனர் என மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்

கொழும்பில் இருந்து மட்டக்களப்புப் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்திற்கு சரக்கு ரயிலில் அனுப்பிவைக்கப்பட்ட சரக்கு பெட்டி மட்டக்களப்பு ரயில் நிலையத்தை வந்தடைந்து அங்கு நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில், கடந்த 5 ஆம் திகதி அந்த ரயில் பெட்டியை உடைத்து அங்கிருந்து 750 கிராம் கொண்ட 750 திரிபோஷா மா பக்கற்றுக்கள் திருட்டுப்போயிருந்ததாக 7 ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து பொலிஸாரின் விசாரணையில் திருடப்பட்ட திரிபோஷா மா பக்கற்றுக்களை இருவர் விற்பனை செய்து வருகின்றனர் எனத் தகவல் கிடைத்தது. அதனை அடுத்து மட்டு. தலைமையக பொலிஸ் நிலையப் பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜி.எம்.எஸ்.கஜநாயக்கா தலைமையிலான பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கருவப்பங்கோணி மற்றும் கூழாவடி பிரதேசத்தைச் சேர்ந்த இளஞர்கள் இருவரை அவர்களது வீடுகளில் வைத்து கைது செய்தமையுடன் திருடப்பட்ட ஒருபகுதி திரிபோஷா மா பக்கற்றுக்களையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தபடவிருந்தனர்.

# சுகதேகம் ஆதுரசாலை சித்த மருத்துவ நிலையம் நாவற்குழி நெய்தல் கடற்கரை நகரில் திறந்து வைப்பு

சுகதேகம் ஆதுரசாலை (ஆதுலர் சாலை) எனும் சித்த மருத்துவத்துடன் இணைந்த மருத்துவ நிலையக் கட்டடம் நெய்தல் கடற்கரை நகரில் கடந்த சனிக் கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அவுஸ்திரேலியா, மெல் போர்ணைச் சேர்ந்த வைத்தியரும் இலங்கையின் புகழ்பூத்த பொப்பிசைப் பாடகருமான நித்தி கனகரத்தினம் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பா ணம் நீதி வான் நீதிமன்றின் நீதிவான் ஆ.ஆனந்தராஜா, யாழ்ப்பாணம் இந்தி யத் துணைத்தூதரகத்தின் தூதரக அதி காரி மனோஜ்குமார், வடக்கு மாகாண சுகாதார, சுதேசமருத்துவ, நன்நடத்தை, சிறுவர் பராமரிப்பு அமைச்சின் செயலா ளர் சிவருகுநாதன் திருவாகரன், யாழ்ப் பாணம் பல்கலைக்கழகப் பேரவை உறுப் பினரும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் சுகதேகம் ஆதுர சாலையும் யோகா மற்றும் தியானப் பயிற்சி நிலையமும் திறந்துவைக்கப் பட்டன.















# இரசாயனங்களின் மூலம் பழங்களை பழுக்கச் செய்வோருக்கு எச்சரிக்கை

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பூநகரிச் சந்தையில் நடவடிக்கை




- த.சுபேசன் -

பூநகரிச் சந்தைகளில் பழங்களைப் பழுக்க வைக்க இரசாயனங்களை நேரடியாகப் பிரயோகிக்கும் வியாபாரிகளைக் கண்டுபிடித்து எச்சரித்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பழங்களைப் பாதுகாப்பாகப் பழுக்க வைக்கும் முறைமை குறித்தும் தெளிவூட்டினர்.

கடந்த வெள்ளிக்கிழமை பூநகரிப் பகுதியிலுள்ள பலசரக்கு வர்த்தக நிலையங்கள் மற்றும் பழவிற்பனை நிலையங்கள் மீது பொது சுகாதார பரிசோதகர்கள் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது பலசரக்கு கடைகளின் களஞ்சியப் பகுதி மற்றும் விற்பனைப் பகுதிகளில் மாசடையும் வகையில் களஞ்சியப்படுத்தப்பட்ட பொருள்கள் அழிக்கப்பட்டமையோடு வழக்குத் தாக்கல் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மேலும் பழவிற்பனை நிலையங்கள் சோதனையிடப்பட்ட போது, அங்கு பழங்களைப் பழுக்கவைக்கப் பயன்படுத்தும் இரசாயனங்கள் தெளிகருவிகளுடன் கண்டு பிடிக்கப்பட்ட நிலையில் சம்பந்தப்பட்ட பழ வியாபாரிகளுக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பாதுகாப்பான முறையில் பழங்களைப் பழுக்க வைக்கும் முறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு ஸ்ரீகண்ணகி அம்மன் ஆலயத்தில் கேதார கௌரி விரத காப்புக்கட்டு நிகழ்வு

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீகண்ணகி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற கேதார கௌரி விரத இறுதிநாள் காப்புக் கட்டு நிகழ்வுகள் நேற்று திங்கட்கிழமை பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் சிறப்பாக இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

(படங்கள். வி.ரி. சகாதேவராஜா)










# அட்டகாசத்தில் ஈடுபட்ட யானையை காட்டிற்குள் துரத்தி அடிக்கும் முயற்சி

- பாறுக் ஷிஹான் -

அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மறுசுழற்சி நிலையத்திற்கு அருகாமையில் தனியன் யானை ஒன்று அட்டகாசத்தில் ஈடுபட்டதை அடுத்து வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அந்த யானையை மீண்டும் காட்டிற்குள் துரத்தி அடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

நேற்று அந்தக் கழிவு கொட்டும் இடத்திற்கு வந்த தனியன் யானை வீதிகளில் செல்வோரை அச்சுறுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தது.

இதனை அடுத்து அப்பகுதிக்கு தகவல் அறிந்து வந்த அதிகாரிகள் யானையை அவ்விடத்தில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கையில் துரிதமாக ஈடுபட்டனர்.

அண்மைக்காலங்களில் யானை – மனித மோதலால் யானைகளும் மனித உயிர்களும் இழக்கின்ற சந்தர்ப்பங்கள் சடுதியாக அதிகரித்துள்ளன. அத்துடன் யானை – மனித மோதலால் அதிகளவான மனித உயிரிழப்புக்கள் இடம்பெறும் நாடுகளில் இரண்டாவதாக இலங்கை காணப்படுகிறது.

யானை – மனித மோதலைக் குறைப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் அவை முறையாக அமுல்படுத்தப்படாமை மற்றும் மேற்பார்வை செய்யப்படாமை காரணமாக யானை – மனித மோதலின் இழப்புக்களைக் குறைப்பது இன்று வரையும் முடியால் உள்ளமை வெளிப்படையாகும்.





# புதிதாகக் கொண்டுவரப்படும் மீனவ சட்டம் முழுமையாக தடுத்து நிறுத்தப்படவேண்டும்!

## தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அமைப்பாளர் ஹேமன்குமார வற்புறுத்து

(மன்னார் நிருபர்)

புதிதாக கொண்டுவரப்படவுள்ள மீனவ சட்டம் நிறுத்தப்பட வேண்டும் என தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அமைப்பாளர் ஹேமன் குமார தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்றுத் திங்கட்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டம் தொடர்பில் மீனவர்கள் மத்தியில் உரையாடி அவர்களின் கருத்துக்கள் உள் வாங்கப்பட வேண்டும். இந்தச் சட்டத்தின் ஊடாக மீனவர்கள் தொடர்பில் அனைத்தும் பணிப்பாளரின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்படுகிறது. இது மிகவும் ஆபத்தானது.

எனவே இந்த சட்டத்தில் உள்ள குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு சட்டம் முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும்.

அதனை நிறைவேற்றுவதாக இருந்தால் அதனை மீனவர்கள் மத்தியில் கருத்துப் பரிமாற்றத்திற்கு உள்ளாக்கி, அதில் பல விடயங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும். – என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.11.2023

## மேஷம்

இன்று தவறுகள் நேராத வண்ணம் உங்களை நீங்கள் கண்காணித்துக் கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை முன்னுரிமைப்படுத்தி முறையாக கவன மாகக் கையாள வேண்டும்.

நீங்கள் இன்று பொறுமையுடனும் உறுதியுடனும் பணிகளை முடிக்க வேண்டும். தவறுகள் ஏற்படா வண்ணம் தவிர்க்க கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் இருவரும் ஒருவருடன் ஒருவர் கலந்து பேச வேண்டும். இதன் மூலம் புறக்கணிப்பு உணர்வு தவிர்க் கப்படும். அது உங்கள் உறவை பாதிக்காமல் பார்த்துக் கொள்ள முடியும்.

உங்கள் செலவுகளை திட்டமிட்டு சிறப்பாக செலவு செய்ய வேண்டும். இதன் மூலம் இன்றைய தினம் சிறப் பாக இருக்கும்.

தியானம் மற்றும் பிரார்த்தனை மூலம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்துக்கொள்ள முடியும்.

## ரிஷபம்

புதிய நபர்களின் நட்பு இன்று உங் களுக்கு கிடைக்கும். இது பின்னர் உங் களுக்கு பயனளிக்கும் உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் செய்து முடிப்பீர்கள்.

உங்கள் பணிக்கு உரிய பாராட்டு கிடைக்கும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடிப்பீர்கள்.

நீங்கள் இருவரும் அன்பான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவு சிறக்கும்.

பணம் அதிக அளவில் காணப்படும். பணம் செலவு செய்து அதன் விளைவில் திருப்தி அடைவீர்கள்.

பக்திப் பாடல்கள் கேட்பது பயனளிக்கும். அதன் மூலம் தேக ஆரோக்கியம் மற்றும் மன ஆரோக்கியம் பராமரிக்கலாம்.

## மிதுனம்

இன்று உங்கள் அனைத்து முயற்சி களிலும் வெற்றி காண்பீர்கள். வாழ் வின் உயரத்தை எட்டுவீர்கள். உங்கள் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் விரும்பியதை அடைவீர்கள்.

நீங்கள் உங்களுக்கு கொடுத்த பணிகளை விரைவாக முடிப்பீர்கள். பணிகளை நல்ல தரத்துடன் அளிப்பீர்கள். உங்கள் திறமையின் மூலம் எளிதாக பணியாற்றுவீர்கள்.

நீங்கள் இருவரும் உறவுப் பிணைப்பை வலுப்படுத்து வீர்கள். உங்கள் இருவரிடையே நல்லுறவு காணப் படும்.

இன்று உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும் உங்கள் சேமிப்பை உயர்த்துவீர்கள்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். இதன் மூலம் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கடகம்

நீங்கள் இன்று பொறுமையுடன் அமைதியை கடைபிடிக்க வேண்டும். திட்டமிட்டு திறமையுடன் செயலாற்ற வேண்டியது அவசியம். புனித யாத்திரை மேற்கொள்வீர்கள்.

பணியிடத்தில் பணிச்சுமை அதிகமாக காணப்படும். பொறுமையுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை தேவை.

உங்கள் துணையின் உணர்வை புரிந்து கொள்ளுங்கள். அவர் / அவள் தனிமையை உணராத வண்ணம் பார்த் துக் கொள்ளுங்கள். இருவரிடையே மகிழ்ச்சி நிலவ இது மிகவும் அவசியம்.

இன்று கவனமாக இல்லாவிட்டால் பணப்பற்றாக்குறை ஏற்படும். நீங்கள் சரியாக கையாண்டால் உங்கள் தேவை களை பூர்த்தி செய்துகொள்ளலாம்.

இன்று அமைதியுடன் இருந்தால் அனைத்தும் சிறப்பாக இருக்கும்.

## சிம்மம்

உங்கள் பொறுமை காரணமாக வெற்றி அடைவீர்கள். பொறுமை மற்றும் புத்திசாலித்தனம் பொறுத்து உங்கள் வளர்ச்சி அமையும். உங்கள் செயல்க ளில் கவனம் தேவை.

உறுதியும் தைரியமும் இருந்தால் இன்று வெற்றி பெறலாம். சாதாரண பணிகளை விட இன்று பணிகள் கூடுதலாக இருக்கும்.

உங்கள் துணையுடன் உறவு நல்லுறவாக அமைய அவருடைய கருத்துக்கும் மதிப்பு அளியுங்கள். அவருடன் நட்புணர்வு கொள்ளுங்கள்.

இன்று உங்கள் அதிர்ஷ்டத்தை விட திறமையில் நம் பிக்கை வேண்டும். பணபுழக்கம் சிறப்பாக இருக்காது. என்றாலும் அதனை பெரிதாகக் கொள்ள வேண்டாம். நிதிநிலையை மேம்படுத்த முயலுங்கள்.

தோல் அரிப்புகளை தடுக்க எண்ணெய் உணவுகளை தவிர்க்கவும். அதிகமாக வெயிலில் சுற்றாதீர்கள்.

## கன்னி

நீங்கள் விரும்பியது இன்று நிறை வேறும். உங்கள் பிரார்த்தனைகள் நிறை வேறும் நீங்கள் இன்று மகிழ்ச்சியாக உற்சாகமாக இருப்பீர்கள்.

நீங்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விட அதிகப் பணிகளை கையாள்வீர்கள். உங்கள் மேலதிகாரிகள் உங்களின் நேர்மையைக் கண்டு உங்களைப் பாராட்டுவார்கள்.

நீங்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். இருவரும் இணைந்து திரைப்படம் போன்ற பொழுதுபோக்கு நிகழ்சிகளை கண்டு களிப் பீர்கள்.

உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். உங்கள் திறமை காரணமாக உங்கள் சேமிப்பு பல மடங்கு உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.

## துலாம்

இன்று செயல்களை திட்டமிட்டால் சிறப்பாக ஆற்றலாம். உங்கள் மன தில் மகிழ்ச்சி குறைந்தது போல உணர் வீர்கள். அமைதியாக இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம். சில கூடுதல் பொறுப்புகளை சுமக்க நேரும்.

இன்று கவனச் சிதைவு ஏற்படாத வகையில் பணிகளை ஆற்ற வேண்டும். உங்கள் பணிகளை அமைதியாக விடாமுயற்சியுடன் மேற்கொள்ளுங்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படும். பேசி தீர்ப்பதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். இதனால் பிரச்சினைகள் தீரும்.

நிதிநிலைமை சுமாராக இருக்கும். சேமிப்பு மற்றும் சிக்கனமானசெலவைமேற்கொள்ளவேண்டும். இருப்பதைக் கொண்டு வாழ்தல் அவசியம்.

இன்று கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்புள்ளது.

## விருச்சிகம்

இன்று நீங்கள் உற்சாகமாக ஆற்ற லுடன் செயல் பட வேண்டும். பொறுமை யாக செயல்களைக் கையாள வேண்டும். உங்கள் கூடப் பிறந்தவர்களுடன் சிறு பிரச்சினைகள் ஏற்படலாம்.

பணி சம்பந்தமாக இன்று பயணம் மேற்கொள்ள நேரும். பணியிடத்தில் சவால்கள் நிறைந்து காணப்படும் என்பதால் புத்திசாலித் தனமாக பணிகளைக் கையாள வேண்டும்.

இன்று உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். அமைதியாக இனிமையாக உங்கள் கருத்துகளை வெளிப்படுத்த வேண்டும்.

இன்று செலவுகள் சிறிது அதிகமாக காணப்படும் என்பதால் பணத்தை கவனமாக நிர்ணயிக்க வேண்டும். சிறப்பாக திட்டமிட வேண்டும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை கண்களை பரிசோதித்துக் கொள்ளவது சிறந்தது.

# இன்றைய ராசி பலன்கள் - 14.11.2023

## தனுசு

இன்று உங்களிடம் எதிர்மறை எண்ணங்கள் நிறைந்து காணப்படும். இதனை தவிர்த்தல் நல்ல மன நிலையுடன் காணப்படலாம். உற்சாகமுடன் இருந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

இன்று சற்று மந்தமாகச் செயல்படுவீர்கள். அதனால் பணிகளை முடிக்க தாமதமாகும் கவனமாகப் பணியாற்றினால் முன்னேற்றம் கிடைக்கும்.

சிறந்த தகவல் பரிமாற்றம் மூலம் சிறந்த பிணைப்பு உருவாகும். இதனைப் பின்பற்றுவதன் மூலம் உறவில் அன்பை வளர்க்க முடியும்.

பண வரவு சுமாராக இருக்கும். பணத்தை எவ்வாறு கையாள்வது என்று புரிந்து கொண்டு சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

அற்ப விஷயங்களுக்காக சிறிது குழப்பமடைவீர்கள்.

## கும்பம்

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீண்ட கால திட்டம் சிறந்தது. முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும். சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். பணியிடத்தில் நல்ல வாய்ப்புகள் கிடைக்கும் உங்கள் படைப்பாற்றல் அதிகரிக்கும்.

இன்று நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணைக்கு மகிழ்ச்சி கிடைக்கும். உங்கள் இருவரிடையே அன்பு அதிகரிக்கும்.

உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் கையில் உள்ள பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.

## மகரம்

இன்று மிகச் சிறப்பான நாள். உங்கள் அனைத்து முயற்சிகளும் இன்று வெற்றி அடையும். உங்கள எண்ணங்களில் அமைதி வேண்டும்.

உங்கள் பணிகளை அனைவரும் பாராட்டுவார்கள். உங்கள் சக பணியாளர்களுக்கு நீங்கள் எடுத்துக்காட்டாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை வளர்க்க முடியும். இதனால் உறவை வலுப்படுத்த முடியும்.

பணபுழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பும் கணிசமாக உயரும்.

இன்று சிறப்பான ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## மீனம்

தற்போதைய நிலையிலிருந்து நீங்கள் முன்னேற நீங்கள் அதிகமாக முயல வேண்டும். இதன் மூலம் பாதுகாப்பின்மை உணர்வு அகலும். உற்சாகமாக இருக்க முயலுங்கள்.

நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். பணிகளை ஒப்படைக்கும் முன் தவறுகள் உள்ளதா என்று சரி பார்க்க வேண்டும்.

உங்கள் பிரியமானவரிடத்தில் அன்பாக இருக்க வேண்டும். இதனால் நல்லுறவை வளர்க்க இயலும்.

சில கடன்களை அடைக்க வேண்டியிருக்கும். அதனை உடனே செய்வதன் மூலம் பண இழப்பை தடுக்க முடியும். பணத்தை சிறப்பாக நிர்வகிக்க வேண்டியது அவசியம்.

இன்று தொண்டை வலிக்கான வாய்ப்பு உள்ளதால் குளிர்ந்த நீரைப் பருகுவதை தவிர்க்கவும். தலைவலியை தவிர்க்க அமைதியாக இருக்கவும்.







# சாதனை படைத்த வீரர்களுக்கு நுவரெலியாவில் பயிற்சிப் பாசறை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மற்றும் சர்வதேச குறுந் தூர ஓட்டம் மற்றும் நெடுந்தூர ஓட்டப் போட்டிகளில் சாதனை படைத்த வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக் கான விளையாட்டுப் பயிற்சிப் பாசறை அண்மையில் நுவரெலியாவில் இடம் பெற்றது.

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகம் ஒழுங்கு செய்திருந்த இந் தப் பயிற்சிப் பட்டறை ஐந்து நாட்கள் இடம்பெற்றன.

50 இற்கும் மேற்பட்ட பயிற்று விப்பாளர்களைக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த பயிற்சி முகாமில் இலங்கையின் பல பாகங் களையும் சேர்ந்த பலர் பங்கேற்ற னர்.









# வவுனியாவில் கராத்தே போட்டிகள்!

- அஸ்ஹர் இப்றாஹிம் -

ஐ.எம்.ஏ. கராத்தே சங்க வவுனியா கிளையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மாணவர்களுக்கிடையிலான கராத்தே போட்டிகள் அண்மையில் வவுனியா வை. எம்.எச்.ஏ. மண்டபத்தில் நடைபெற்றன.

ஐ.எம்.ஏ. வவுனியா கிளையின் தலைவர் பீ.மிதுசான் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.








# தேசிய மட்ட செஸ்ஸில் 3ஆவது வருடமாக சம்பியன்

## சாய்ந்தமருது மாணவி சாதனை




- நூருல் ஹுதா உமர் -

செஸ் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற தேசிய யூத் செஸ் சம்பியன்ஷிப் போட்டியில், சாய்ந்தமருது அல்– ஹிலால் வித்தியாலய மாணவி முபீன் பாத்திமா சபிலுல் லமாஹ் சம்பியனானார்.

இப்போட்டி அம்பாறை டீ. எஸ். சேனநாயக்கா தேசிய பாடசாலையில் கடந்த 11, 12ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இதில் சாய்ந்தமருது அல்– ஹிலால் வித்தியாலய மாணவி முபீன் பாத்திமா சபிலுல் லமாஹ், 9 வயதுப் பெண்கள் பிரிவு சதுரங்கப் போட்டியில் வெற்றியீட்டினார். இவர் தொடர்ந்து மூன்றாவது வருடமாக அம்பாறை மாவட்ட சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காரைநகர் - சித்தன்கேணி - யாழ். பஸ் சேவை இன்று முதல் சீருக்கு!





நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பமான – காரைநகர் முதல் மூளாய் டச்சுவீதி ஊடாக சித்தன் கேணி – யாழ்ப்பாணம் வரையான 785/1 இலக்க பஸ் சேவை இன்று முதல் தினமும் மூன்று முறை சேவையாக விஸ்தரிக்கப்படுகின்றது.

இதன்படி தினமும் காலை காரைநகர் துறை முகத்திலிருந்து 6.25 புறப்படும் முதல் பஸ் மூளாய் டச்சு றோட் வீதிக்கு 7.10 மணியளவில் வந்தடைந்து 7.40க்கு யாழ்ப்பாணம் சென்றடையும். பின்னர் மீண்டும் யாழ்ப்பாணத்திலி ருந்து 7.45 ஆரம்பித்து சித்தன்கேணி டச்சு வீதிக்கு 8.45 மணியளவில் வந்துச் காரைநகர் துறைமுகத்தை 9.35க்குச் சென்றடையும்.

மீண்டும் இரண்டாவது சேவை அங்கி ருந்து 10 மணிக்கு புறப்பட்டு 10.35 மணிக்கு டச்சு வீதிக்கு வந்து, 11.20 யாழ்ப் பாணத்திற்கு சென்றடையும். அங்கிருந்து பிற்பகல் 1.30 புறப்பட்டு 2.05 க்கு டச்சு வீதியூடாக வருகை தந்து காரைநகர் துறைமுகத்தை 2.50 மணியளவில் சென்றடையும்.

மூன்றாவது சேவையா காரைநகரி லிருந்து 3.00 மணிக்கு புறப்பட்டு 3.35 மணிக்கு டச்சு வீதி ஊடாக யாழ்ப்பா ணத்தை 4.20க்குச் சென்றடையும். அங் கிருந்து 4.45 புறப்பட்டு 5.20 க்கு டச்சு வீதியீடாக காரைநகர் துறைமுகம் 6.05க்குச் சேரும்.

தினமும் இந்நேரப்படி சேவை இடம்பெறும். இந்த சேவை

காரைநகர் – மூளாய் பிள்ளையார் கோவிலடி – டச்சு வீதி ஊடாக சித்தன் கேணி, யாழ்ப்பாணம் வீதி – வட்டுக்கோட் டைச் சந்தி – அராலி செட்டியார்மடம் ஊடாக யாழ்ப்பாணம் செல்லும். நேர காலத்தை கவனத்தில் கொண்டு இந்தச் சேவையை பொதுமக்கள் முறையாக பயன்படுத்திக் கொள்ள முடியும்.

## விசா காலம் நீடிக்கப்படாத காரணத்தால் ஜோர்தானில் 200 இலங்கையர் பாதிப்பு




விசா காலம் நீடிக்கப்படாமையினால் ஜோர்தா னிலுள்ள தொழிற்சாலையொன்றில் பணிபுரியும் சுமார் 200 இலங்கைப் பணியாளர்கள் பாதிக் கப்பட்டுள்ளனர்.

இந்த இலங்கையர்கள் தற்போது ஜோர்தா னின் சஹாப்பிலுள்ள அல் ஜ/மாத் கைத்தொழில் வலயத்திலுள்ள அசீல் என்ற தொழிற்சாலையில் பணிபுரிந்து வருகின்றனர்.

விசா காலம் நீடிக்கப்படாமை உள்ளிட்ட மேலும் பல பிரச்சினைகளை தாம் எதிர்கொள்வதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

## லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் விளக்கமறியல் சுற்றாடல் அதிகாரசபைத் தலைவருக்குப் பிணை



லஞ்சம் பெற்ற சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக் கப்பட்டிருந்த மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள் ளார்.

புதுக்கடை நீதவான் நீதிமன் றத்தில் நேற்று ஆஜரப்படுத் தப்பட்டமையை அடுத்துப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் உள்ளிட்ட மூவர் கடந்த 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

ஒரு கோடி ரூபா லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இரண்டு இடைத்தரகர்கள் மூலம் பணத்தை பெற்றுக் கொண்ட சந்தர்ப்பத்திலேயே மத் திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பி டத்தக்கது.

# யாழ் சிறையில் இந்திய மீனவருக்கு தீபாவளி இனிப்புப் பலகாரங்கள்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள இந்திய மீனவர்களிற்கு தீபாவ ளியை முன்னிட்டு இனிப்பு பலகாரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை கடற்பரப்பிற்குள் கடந்த ஒக்டோபர் மாதம் 15ஆம், 22 ஆம் திகதி களில் ஊடுருவி மீன்பிடித்த சமயம் கடற் படையினரால கைது செய்யப்பட்டு நீதி மன்ற உத்தரவின் பெயரில் யழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களுக்கே தீபாவளித் திரு நாளன்று இனிப்பு வகைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள 22 இந்திய மீனவர்களிற்கும் யாழில் உள்ள இந்தியத் துணைத் து தரக அதிகாரிகளினால் தீபாவளித் தினத்தில் இவை வழங்கி வைக்கப்பட்டுள் ளன.